வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 13.04.2023 வியாழக்கிழமை இதழ் : 124 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## இலங்கை அரசு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும்!

### வாஷிங்டனில் ஷெஹான் சேமசிங்க



வாஷிங்டன், ஏப். 13

பொருளாதார நெருக்கடியின்போது இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வந்தமைக்காக சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

கடன் நிலைத்தன்மையை அடைவதற்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து அமுல்படுத்துவோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

15

## மரபுரிமைகளை பாதுகாக்கக் கோரி நல்லூர் முன்றிலில் உண்ணாவிரதம்!

### ஞாயிற்றுக்கிழமை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 13

தமிழர் தாயக பகுதியில் நடைபெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அடையாள உண்ணாநோன்பு போராட்டமும் தமிழர் தாயகம் தழுவிய மாபெரும் கையெழுத்துப்போராட்டமும் நடத்தப்போவதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு என்ற அமைப்பு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நல்லை ஆதீன முன்றலில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்-

1) அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும், நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட

15

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கின்றது சீனா!

### சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு

கொழும்பு, ஏப்ரல் 13

**மறுசீரமைப்பு என்ற போர்வையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு இலங்கைக்கு சீனா அழுத்தம் கொடுப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சாத்தியமான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் கடந்த 2014ஆம் ஆண்டு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், சில காரணங்களால் அவை தாமதமாகின.

இந்த நிலையில் சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் 5ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக

15

## மூன்று படிமுறைகளில் தேசிய நல்லிணக்கமாம்!

### கூறுகிறார் அலி சப்ரி

கொழும்பு, ஏப். 13

மூன்று படிமுறைகள் மூலம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமைச்சரவை உபகுழு ஒன்று உருவாக்கப்பட்டது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்தி பரந்த ஒருமித்த கருத்தைப் பெற்று, பாராளுமன்றத்தில் ஏனைய கட்சிகளின்

15

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பை கைவிட்டனர்!

கொழும்பு, ஏப். 13

பணிப்புறக்கணிப்பை கைவிட்டு, எதிர்வரும் 17ஆம் திகதி முதல் கற்பித்தல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க

15

## இலங்கைக்கான நிதி சலுகை ஆதரவு; ஆசிய அபிவிருத்தி வங்கி பரிசீலனை!

கொழும்பு, ஏப். 13

இலங்கைக்கான அதிக நிதிச் சலுகை ஆதரவு தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி பரிசீலித்து வருவதாக புளும்பேர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் சுற்றுச்சூழல் திட்டங்களுக்கு ஆதர வளிப்பது தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி கவனம் செலுத்தியுள்ளதாக அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

புளும்பேர்க்குக்கு கருத்துரைத்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் சென்சென்இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலதிக சலுகை வளங்களை திரட்டி இலங்கைக்கு உதவுவதற்காக தீவிரமாக செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகளின் ஒரு பகுதியாக இது இருக்கும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

(அ)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை பலவந்தமாக நிறைவேற்றமாட்டோம்!

### கூறுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, ஏப். 13

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் பலவந்தமாக ஒரு போதும் நிறைவேற்றப் போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி செயற்குழு உறுப்பினர் சாந்தினி கோன்கஹகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் வர்த்தமானி மூலம் வெளிப்படுத்தி இருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு சட்டம் போன்று அதனை எதிர்க்கட்சியினர் மற்றும் சிவில் அமைப்பினர்

15

## கடன் சீரமைப்புக்கு சீனா ஆதரவளிக்கும்

கொழும்பு, ஏப். 13

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு சீனா ஆதரவளிக்கும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தமது எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்தகால கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள அவர், அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடன்களை மறுசீரமைக்கும் நாட்டின் முயற்சிக்கு, சீனா ஆதரவளிக்கும் என்றும், மீளச் செலுத்தும் கடப்பாடுகளுக்கு

15

இலங்கை கடன் சீரமைப்பு பேச்சு ஏற்பாடு:

## இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் நிதியமைச்சர்கள் அறிவிப்பர்

கொழும்பு, ஏப். 13

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை செயல்முறையை அறிவிப்பதற்காக இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளின் நிதி அமைச்சர்கள் வாஷிங்டனில் இன்று வியாழக்கிழமை செய்தியாளர் சந்திப்பை நடத்துவார்கள் என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

“இலங்கை மீதான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை செயல்முறையை தொடங்குவது குறித்து அறிவிப்பதற்கு ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ்

15

## சிரேஷ்ட ஊடகவியலாளர் மாணிக்கவாசகம் காலமானார்



வவுனியா, ஏப். 13

சிரேஷ்ட ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் நேற்று தமது 76 ஆவது வயதில் காலமானார்.

உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சுமார் 04 தசாப்த ஊடக அனுபவத்தைக் கொண்டுள்ள பி.மாணிக்கவாசகம், உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்களுக்காக பணியாற்றியுள்ளார்.

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம். பிக் கள் எப்போது இணைந்து கொள்வார்கள் என்பதுதான் இப்போது எல்லோரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

நீண்ட காலமாகத் தமது அணியிலிருந்து யாரும் அர சுடன் இணையமாட்டார்கள் என்று திரும்பத் திரும்பக்கூறி வந்த ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேம தாஸ இப்போது, தமது கட்சியை உடைக்க ரணில் முயன்று வருகிறார் என்று குற்றஞ்சாட்டி வருவதுடன் தமது கட்சியினருக்கு தலா இருநூறு மில்லியன் ரூபாய் பேரம் பேசப்படுவதாகவும் கூறிவருகின்றார்.

அதிலும் முக்கியமானது, தமது அணியின் மூத்த உறுப் பினரான ராஜித சேனாரத்ன பகிரங்கமாகவே ரணிலின் செயல்பாடுகளை ஆதரித்து கருத்துச் சொல்லி வருவதும் அவரின் அமைச்சரவையில் சேர தான் தயாராக இருக்கி றார் என்றும் தெரிவித்து வருவதால் அவரின் கட்சி யினர், அவர்மீது கடும் கோபத் தில் இருப்பதும் அண்மைய நாட்களில் வெளிப்படுத்தப்படு கின்றது.

ராஜித கட்சி மாறுவதற்கு தயக்கம் காட்டாத ஒருவர் என்றும் அவருக்கு கட்சி மாறுவது பழகிப்போன ஒன்று தான் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியினர் பொதுவெளியில் தெரிவித்து வருகின்றனர்.

அதைவிட நகைச்சுவையா னது இவர்கள் எல்லோருமே ஐக்கிய தேசியக் கட்சியிலி ருந்து ஏதோ ஒரு நன்மை கருதி கட்சி மாறியவர்கள்தான்.

இதுபோன்ற அனுபவம் நமது தமிழ் தேசியக் கூட்ட மைப்பிலும் நாம் பார்த்தது தான்.

கடந்த காலங்களில் கூட்ட மைப்பாக இயங்கியபோது, தங்களுடன்கூட இருந்த கட்சிக்காரர்களை அவர்களுட னிருந்து விலகி தனிவழி செல்லத் தொடங்கியதும் அவர்களைப்பற்றி எவ்வளவு கேவலமாக தூற்ற முடியுமோ அவ்வளவு கேவலமாக தூற்றி யதுபோல-

இப்போது ராஜித பற்றி ஐக்கிய மக்கள் சக்தியினர் தூற்றி வருவதைக் காணமுடி கின்றது.

ராஜித போன்றே, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்களான ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரட்ண, கபீர் காசிம் போன்ற முக்கிய தலைவர்களும் ரணிலுடன் இணையத் தயாராகி விட்டன ரென நீண்ட நாட்களாகவே கூறப்பட்டு வருகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் சிலர் தொடர்ச்சியாகவே இது குறித்துத் தெரிவித்து வருவது டன், ஒவ்வொருவரும் தத்த மக்கு வேண்டியவாறு தம் மோடு இணையப்போகின்ற எம். பிக்களின் தொகையை தெரிவித்து வருகின்றனர்.

எவரைப் பார்த்தாலும் அது குறித்தே கருத்துத் தெரிவித்து வருகின்ற போதிலும் எதுவுமே நடப்பதாகத் தெரியவில் லையே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் உள்ள ஒரு கட்சித் தலைவரோடு பேசியபோது அவர் பல தகவல்களைச் சொன்னார்.

ஐ. எம். எவ். என்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை களை ஏற்று அவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை பாராளுமன்றில் முன்வைத் துள்ள ஜனாதிபதி ரணில், அந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து முன் னோக்கிச் செல்வதற்கு பாராளு மன்றத்தின் அனுமதியைக் கோரி பிரேரணை ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார். அடுத்த தடவை (புத்தாண்டு கொண்டாட்டங்கள் முடிந்த பின்னர்) பாராளுமன்றம் கூடும்போது அது குறித்து விவாதம் நடைபெற்று வாக் கெடுப்பும் நடத்தப்படலாம். அவ்வாறு வாக்கெடுப்பு நடத் தப்பட்ட பின்னர், அதாவது ஐ. எம். எவ்வின் நிபந்தனைக ளை ஏற்று அதனுடனான ஒப்பந்தத்தை முன்நகர்த்தி செல்ல பாராளுமன்றம் அனு மதி வழங்கிய பின்னர், ஜனாதிபதி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான அழைப்பை விடுப்பார் என் றும் அதன் பின்னரே இந்த அணி மாற்றம் நடைபெறும் என்றும் அறியமுடிந்தது.

இதற்கிடையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒவ் வொரு கட்சிகளாக அழைத்து அவர்களின் கருத்துகளையும் கேட்டு வருகின்றார்.

அவர்கள் அவ்வாறு தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ள விரும்பாவிட்டாலும் எதிரணியில் இருந்து கொண்டே தமது முயற்சிக ளுக்கு ஆதரவு வழங்குமாறும் கோரி வருகின்றார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக பல்வேறு அபிவிருத்தித் திட் டங்களையும் முன்கொண்டு செல்ல பல அமைப்புகளை உருவாக்க இருப்பதாகவும் அவற்றிலாவது பங்களிப்பு செய்யுமாறும் எதிரணியினரை கோரிவருகிறாராம்.

பாராளுமன்றம் அடுத்த தடவை கூடிய பின்னர் பல 'சம்பவங்கள்' ஒன்றன் பின் ஒன்றாக நடக்கவிருக்கின்றன என்பது மாத்திரம் புரிகின் றது.!

- ஊர்க்குருவி

# சீரணி அம்மன் திருவிழாவை நடத்தக் கோரி கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 13

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்மன் ஆலய பெருந் திருவிழாவை நடத்தக் கோரி பக்தர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத் தினர்.

இந்த போராட்டத்தை முன் னெடுத்த பக்தர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தனிப்பட்ட காரணத்துக் காக ஒரு சிலர் இந்த ஆலயத் தின் திருவிழாவை தடுக்கிறார் கள். இது தொடர்பாக நீதி மன்றத்தில் வழக்கும் உள்ளது. நீதிமன்ற வழக்கானது எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆனால், கொடியேற்றமானது 18ஆம் திகதி நடைபெற வேண்டும்.

ஆலயம் என்பது அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து ஒற்றுமையாக செயல்பட வைக்கும் புனித மான இடம். ஆலயத்தின் திருவிழாக்கள் மூலம்தான் சமூகத்தின் ஒற்றுமை மேலோங்கும்.

பல வரலாற்று அம்சங் களை கொண்ட இந்த கோவி லுக்கு நாட்டின் பல பாகங்க ளிலும் இருந்தும் பக்தர்கள் வருகை தருகின்றனர். அத்து டன், புலம்பெயர் தேசத்தில் இருந்தும் பலர் வருகை தருவது வழமை.

திருவிழாவை நிறுத்து வதால் பலர் பாதிக்கப்படுகின் றனர். ஆலயத்தின் திருவிழா சரியான நாட்களில் ஒழுங் காக நடை பெறாமல் விட் டால் அது அந்த கோவிலைச் சார்ந்த அனைத்து பக்தர்க ளுக்கும் ஒரு தீங்காகவே காணப்படும். அதனால் பாதிப் புகளும் ஏற்படும். எனவே, திரு விழாவை வழமை போல் நடத் துவதற்கு சம்பந்தப் பட்ட அனைத்து தரப்பினரும் பங்களிக்க வேண்டும் - என்றனர். (ஐ)



# கரவெட்டி புத்தக அரங்க விழா சனிக்கிழமை ஆரம்பமாகிறது!

யாழ்ப்பாணம், ஏப். 13

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பத்தாவது நிகழ்வு கரவெட்டி தேவரை யாளி இந்துக் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணி வரை இரு தினங்கள் இடம்பெறவுள் ளது.

நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாபெரும் புத்த கக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறவுள் ளன. மாலை 4 மணியளவில் ஈழத்து நூல்களை அறிவோம் என்ற தலைப்பில் நூல்களின் அறிமுகம் மற்றும் கலந்துரை யாடல் நிகழ்வானது எழுத்தா ளர் ராஜ ஸ்ரீகாந்தன் நினைவு அரங்கில் அதிபரும், சமூக செயல்பாட்டாளருமான ச.செல்வானந்தன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் அறி முக உரைகளை சிவ. ஆரூ ரனின் ஊமை மோகம் நூல் தொடர்பாக ஆசிரியரும் ஆய்வாளருமான கலாநிதி சு. குணேஸ்வரன், வெகுஜனன், இராவணா என்ற புனை பெயர்களில் சி. கா. செந்தி வேல், கலாநிதி ந. இரவீந்தி ரன் ஆகியோர் இணைந்து எழுதிய இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் நூல் பற்றி யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் முன் னாள் தலைவரும், சிரேஷ்ர விரிவுரையாளருமான இ. இராஜேஸ்கண்ணன், எஸ் தரின் பெருவெடிப்பு மலை கள் புத்தகம் பற்றி ஆசிரியரும் ஆய்வாளருமான சி. ரமேஸ், ந. மயூரரூபனின் எழுத்தின் இயங்கியல் நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரன், அழ. பகீரதனால் தொகுக்கப்பட்ட மறுமலர்ச்சி சிறுகதைத் தொகுப்பு தொடர்பாக ஆய் வாளர் சி.விமலனும் ஆற்ற வுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பை கலைவாணி கமலநாதன் மேற்கொள்ளவுள் ளார்.

ஆர்வமுள்ள அனைவரை யும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கிய பேரவையினர் அழைப்பு விடுக்கின்றனர். (ஐ)



நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் கைலாய வாகனத் திருவிழா நேற்று முன்தினம் நடை பெற்றவேளை...!

## சந்திரசேகர பிள்ளையாருக்கு நாளை தேர்

யாழ்ப்பாணம், ஏப். 13

நல்லூர் வடக்கு சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத் தின் தேர்த் திருவிழா சித்திரை வருடப்பிறப்பு தினமான நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடை பெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் பெருந் திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில், இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பைரதத் திரு விழா நடைபெறும்.

நாளை தேர்த் திரு விழாவை தொடர்ந்து நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.04.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பயங்கரவாத தடைச்சட்ட விவகாரம் ?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன. ஆனால், உள்நாட்டு யுத்தம் முடிவுற்று 13 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட இன்றுவரையில் இந்த விடயத்தில் முன்னேற்றம் இல்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பான நகலை வெளியிட்டிருக்கின்றது. ஆனால், இது தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டத்தை விடவும் கடுமையானதென்னும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதன் மூலம் இருக்கின்ற சட்டமே நல்லதென்னும் முடிவுக்கு வர வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்னை ஆயுத மோதலாக பரிணமித்ததைத் தொடர்ந்து, அதனை கட்டுப்படுத்துவதற்கான ஓர் ஆயுதமாகக் கொண்டு வரப்பட்டதே பயங்கரவாதத் தடைச் சட்டம். தமிழர்களை அச்சுறுத்துவது - கட்டுப்படுத்துவதே இந்தச் சட்டத்தின் பிரதான இலக்காக இருந்தது. தமிழர் தரப்பில் அவ்வப்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும் அதனை அரசாங்கங்கள் கண்டு கொண்ட வரலாறில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் யுத்தம் நிறைவுற்றதைத் தொடர்ந்து மனித உரிமைகள் விடயத்தில் இலங்கைமீது அழுத்தங்களை பிரயோகித்துவரும் மேற்குலக நாடுகள் பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைக்குமாறு கோரிவருகின்றன.

குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியம் இந்த விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகின்றது. இந்தப் பின்புலத்தில்தான் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் ஜி. எஸ். பி. வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தியது.  இவ்வாறானதொரு சூழலில்தான் இந்த விடயத்துக்கு முற்றுப் புள்ளியிட வேண்டுமென்று ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். ஆனால், புதிய வரைவு தொடர்பில் உள்நாட்டில் மட்டுமல்ல வெளித்தரப்புகளும் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் ஒன்றில் சட்டம் மாற்றியமைக்கப்படும் அல்லது நடைமுறையில் இருப்பதே தொடரும்.

பயங்கரவாத விவகாரம் ஓர் எல்லைதாண்டிய விவகாரமாக வளர்ச்சியுற்றிருக்கின்றது. இந்த நிலையில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துதல் என்பது, ஓர் உலகளாவிய விவகாரம். எனவே, பயங்கரவாத தடைச் சட்டம் இலங்கைத் தீவில் முழுமையாக இல்லாமல் ஆக்கப்படப் போவதில்லை. அது ஒருபோதும் நிகழாது. சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைக்கப்படுவதற்கான விவாதங்களே இடம்பெறுகின்றன. இதில் பிறிதொரு பிரச்னையும் உண்டு.

இதுவரையில் தமிழர்கள் தொடர்பில் மட்டுமே நோக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமானது தற்போது, தென்னிலங்கை நோக்கிலும் பார்க்கப்படுகின்றது. அரசாங்கம் மக்களின் கிளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கான ஒரு துருப்புச்சீட்டாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கையாள முற்படுவதாக எதிரணியினரும் கொழும்பு சிவில் சமூக குழுக்களும் வாதிடுகின்றன. குறிப்பாக 'அரகலய' கிளர்ச்சிக்கு பின்னரான சூழலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சிங்களவர்களுக்கு எதிரான ஒன்றாகவும் பார்க்கும் போக்கும் அதிகரித்திருக்கின்றது.

ஆனால், இங்கு கவனிக்க வேண்டியது வேறு. அதாவது, நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற சூழலில்கூட அரசாங்கத்தால் இவ்வாறாதொரு கடுமையான வரைவை எவ்வாறு துணிவாக முன்வைக்க முடிந்தது? முதலில் ஒரு விடயம் எப்போதுமே அரசாங்கத்துக்கு (எந்த அரசாங்கமாக இருந்தாலும் கூட) சாதகமாகவே இருக்கின்றது. அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு இப்போதும் 32 நாடுகளில் குறிப்பாக, மேற்குலக நாடுகளில் தடை செய்யப்பட்ட ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பாகும். தமிழ் பார்வை எவ்வாறாக இருந்தாலும்கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது உலகம் பரிவு காட்டவில்லை.

அடுத்தது, அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற இஸ்லாமிய பயங்கரவாத தாக்குதல். இந்தத் தாக்குதல் மூலம் இலங்கைத் தீவு சர்வதேச பயங்கரவாத கண்காணிப்பு வலயத்துக்குள் வந்துவிட்டது. மேலும், விடுதலைப் புலிகள் ஒருங்கிணைய முயற்சிப்பதான செய்திகள் அவ்வப்போது வெளிவருகின்றன. அதன் உண்மைத்தன்மை பற்றி தகவல்கள் இல்லாவிட்டாலும்கூட, இந்தியாவில் கைது செய்யப்பட்டவர்கள் அவ்வாறானதொரு கண்ணோட்டத்தில்தான் நோக்கப்படுகின்றனர். இந்தப் பின்புலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை இறுக்கமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் அரசாங்கத்தின் வாதத்தை வெளித்தரப்புக்கள் நிராகரிக்கப் போவதில்லை.

## இடர்மிகு கால செய்திகளின் ஆதர்ச குரல்:
# வாழ்நாள் ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



*ஈழத்தின் போர்க்கால நாட்களில் இரவு 9.15மணிக்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் பலரும் உறங்கமாட்டார்கள்.*

**இடர்மிகு காலத்தின் குரல்:**

*நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசமெங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்தி வந்த, ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த பொன்னையா மாணிக்கவாசகம் நேற்று இன்னுயிர் ஈய்ந்தார்.*

*யுத்த காலத்தில் எழுத்தாயுதத்தை துணிவுடன் பயன் படுத்தியவரும், பத்திரிகைத் தர்மத்தைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு சிறந்த ஊடகவியலாளராகச் சேவையாற்றிய மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளராக என்றும் விளங்குகிறார்.*

*போர்க்காலத்தில் வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல் என்ன என்பதை காதுகொடுத்துக் கேட்க காத்திருந்த உலகத் தமிழ் மக்கள் அவரை என்றும் மறக்கமாட்டார்கள்.*

*வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல்கள் அக்காலகட்டத்தில் அவரது செய்திகளை மாத்திரமே நம்பக் கூடியதாக இருந்தது. பொ மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகயாளராக ஆற்றியசேவையும், அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாதுஆற்றிய பணிமறக்க முடியாதவை. கல்வி, சுகாதாரம், அரசியல் களங்களில் உண்மை நேர்மை துலங்கும் வகை செய்திகள் தந்த மாண்பு மகத்தானவை.*

*கடந்த வருடம் 13.12.2022 இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விருது விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.*

*வீரகேசரியிலும், பி.பி.சி.யிலும் நீண்டகாலம் ஆபத்தான ஒரு யுத்தப் பகுதியிலிந்து செய்தி சேகரிப்புப் பணியை துணிச்சலுடன் - திறம்படச் செய்துவந்தவர். அதனைவிட வேறு சில சர்வதேச ஊடகங்களிலும் அவர் பணியாற்றியிருக்கின்றார்.*

*அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பொன்னையா மாணிக்கவாசகம் அவர்கள் "கால அதிர்வுகள்", "வாழத்துடிக்கும் வன்னி", "மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்" என்னும் நூல்களை எழுதியுள்ளார்.*

*தான் கடந்துவந்த கரடு முரடான பத்திரிகைத் துறை அனுபவங்களையும் தொகுத்து அடுத்த நூலையும் விரைவில் வெளியிட உத்தேசித்திருந்தார்.*

*இந்த நூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் யாவும் வீரகேசரி நாளிதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்புகள் என்பது வீரகேசரிக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.*

*தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையான ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப் பகுதியில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர், அந்தப் பதவியின் மூலமாகச் செய்த பணிகளும் முக்கியமானவை.*

*ஒரு முழு நேர ஊடகவியலாளராக - சுயாதீனமாகப் பணியாற்றிய அவர், தனது அனுபவங்களின் அடிப்படையில் சில நூல்களையும் எழுதியிருக்கின்றார்.*


**'வென்மேரி' விருது கௌரவம் :**

*யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 18.8.22 நடைபெற்ற 'வென்மேரி விருதுகள்" விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் அவர்கள் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.*

*'வென்மேரி அறக்கட்டளை"யின் முதலாவது விருதுவிழாவான நிகழ்வு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. மூத்த ஆளுமைகள், வாழ்நாள் சாதனையாளர்கள், இளம் முயற்சியாளர்கள் என பலதரப்பட்ட ஆளுமைகள் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.*

*இந்நிகழ்வில் ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த மாணிக்கவாசகம் கௌரவிக்கப்பட்டமை முக்கியமானதாகும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடர்பாடுகளைசமாளிக்கவேண்டியிருக்கும்.

**மிதுனம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**

சமயோசிதமாக சாதுர்யமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். இன்று மிக அமோகமான நாள்.

**சிம்மம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**

பிரமுகர்களை சந்திப்பீர்கள். கடனைப் பற்றி யோசிப்பீர்கள். சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**

குடும்பத்துடன் கலந்தாலோசித்து சில முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். போட்டிகளில் வெற்றி காண்பீர்கள். அதிகாரி சில சூட்சமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் தடைகள் உடைபடும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். வாடிக்கையாளர்களால் மறைமுகப் பிரச்னைகள் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**

கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.

**மீனம்**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# அ. தி. மு. க. பொது தீர்மான வழக்கு; 10 நாட்களில் நிறைவுறுத்த உத்தரவு!

## டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவு

*புதுடில்லி, ஏப். 13*

பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட அ. தி. மு. கவின் திருத்தப்பட்ட சட்டவிதிகளை அங்கீகரிப்பது தொடர்பாக பத்து நாட்களில் முடிவெடுக்க வேண்டும் என இந்திய தலைமை தேர்தல் ஆணையத்துக்கு டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட அ. தி. மு. கவின் திருத்தப்பட்ட சட்டவிதிகளை அங்கீகரிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி எடப்பாடி பழினிசாமி தொடர்ந்த வழக்கு டில்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதி புருசந்திரா குமார் கவுரவ் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது அ. தி. மு. க. தரப்பில், "கர்நாடக தேர்தலில் அ. தி. மு. க. போட்டியிடும் வகையில், கட்சியில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களைக் அங்கீகரித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஏற்கனவே கர்நாடகாவில் முன்பு தேர்தலில் அ. தி. மு. க. வெற்றி பெற்றுள்ளது. எனவே, இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் விரைந்து முடிவெடுக்க வேண்டும்." என்று வலியுறுத்தப்பட்டது

அப்போது குறுக்கிட்ட தேர்தல் ஆணைய தரப்பு வழக்கறிஞர், "இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறது. எனவே, இந்த கோரிக்கை தொடர்பாக முடிவெடுக்க 10 நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும் எனக் கோரினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பழனிசாமி தரப்பு, "ஏற்கனவே பல முறை இதுபோன்ற பதிலையே தேர்தல் ஆணையம் கூறி வருகிறது. கடந்த ஜூலை 2022 முதல் இதனையே கூறுகின்றனர். ஆனால், முடிவெடுக்கவில்லை. கர்நாடக தேர்தலில் போட்டியிட வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக முடிவெடுக்க வேண்டும். எனவே, 10 நாட்கள் அவகாசம் வழங்கக் கூடாது." என்று தெரிவித்தார்.

அப்போது, குறுக்கிட்ட ஓ. பன்னீர்செல்வம் தரப்பு வழக்கறிஞர், "சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பான மூல வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்த வழக்கை தற்போதைக்கு விசாரிக்கக்கூடாது. தங்கள் தரப்பும் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் உத்தரவு பிறப்பித்த நீதிபதி புருசந்திரா குமார் கவுரவ், ஏற்கனவே இவர் இந்த விவகாரத்தில் முடிவெடுக்க பத்து நாள் அவகாசம் வேண்டும் எனத் தலைமை தேர்தல் ஆணையம் கேட்டிருந்த நிலையில் அந்த அவகாசத்தை வழங்குவதாகவும் 10 நாட்களில் அ. தி. மு. க. சட்டவிதிகள் திருத்தத்தை அங்கீகரிக்கக் கோரி பழனிசாமி தேர்தல் ஆணையத்தில் அளித்துள்ள மனு தொடர்பாக முடிவெடுக்க வேண்டும் என்று இந்திய தலைமை தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டார்.

மேலும், அ. தி. மு. கவின் திருத்தப்பட்ட சட்ட விதிகளை அங்கீகரிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரிய வழக்கை முடித்து வைத்தும் உத்தரவிட்டார். (ஐ)

# தமிழ்நாடு சட்ட சபை நடுநிலையாக இல்லை!

## பழனிசாமி குற்றச்சாட்டு

*சென்னை, ஏப். 13*

தமிழ்நாடு சட்டசபை நடுநிலையோடு செயல்படுவதில்லை என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் விருத்தாசலம் பாலியல் தொல்லை தொடர்பாக, எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கவனவீர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.

அப்போது பேசிய அவர், "விருத்தாசலத்தில் படிக்கும் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த அந்த பாடசாலையின் உரிமையாளரான தி.மு.க. கவுன்சிலர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

எடப்பாடி பழனிசாமி பேசுவதை நேரலை செய்யாததால் அதிருப்தி அடைந்த அ. தி. மு. க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, சட்டப்பேரவையில் அ. தி. மு. க. உறுப்பினர்கள் பேசும்போது நேரலை செய்யப்படுவதில்லை என்று குற்றம் சாட்டினார். அத்துடன், "சட்டப்பேரவையில் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான நான் பேசும்போது நேரலை செய்யப்படுவதில்லை. எதிர்க்கட்சி மக்களின் பிரச்னைகளை எடுத்து வைக்கும்போது அரசுதான் அதை கவனித்து சரி செய்ய வேண்டும். அவை நடுநிலையோடு செயல்படுவதில்லை" என்றார். (ஐ)

# பெண் குழந்தைகளை சீரழிப்போர் மனித குலத்தின் அவமான சின்னம்!

## முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவிப்பு

பெண் குழந்தைகளுக்கு எதிராக குற்றம் செய்வோர் மனித குலத்துக்கு ஓர் அவமான சின்னம் என முதலமைச்சர் ஸ்டாலின் சட்டபேரவையில் கூறியுள்ளார்.

பாடசாலை ஒன்றின் இயக்குநராக இருந்த தி. மு. கவை சேர்ந்த கவுன்ஸிலர் ஒருவர் பாடசாலை சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக குற்றம் செய்



வோர் மனித குலத்திற்கு ஓர் அவமான சின்னம். அவர் மீது இந்த அரசு பாரபட்சமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் உறுதியளித்தார். (ஐ)

### ஆர். எஸ். எஸ். தமிழகத்தில் பேரணி நடத்த அனுமதி!

*புதுடில்லி, ஏப். 13*

தமிழகத்தில் திறந்தவெளியில் ஆர். எஸ். எஸ். பேரணி நடத்த அனுமதி வழங்கி, சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை உறுதி செய்துள்ள உச்ச நீதிமன்றம், இதுதொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஆர். எஸ். எஸ். அணிவகுப்பு பேரணியை நான்குபுறமும் சுற்றுச்சுவருடன் கூடிய விளையாட்டு மைதானங்களில் நடத்த வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி கடந்த ஆண்டு உத்தரவிட்டிருந்தார்.

இதை எதிர்த்து ஆர். எஸ். எஸ். சார்பில் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் திறந்த வெளியில் பேரணி நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

இதை எதிர்த்து தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பில், திறந்தவெளியில் ஆர். எஸ். எஸ். பேரணி செல்ல அனுமதி வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை உறுதி செய்த நீதிபதிகள், தமிழக அரசின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தனர். (ஐ)

# கர்ப்பவதியான தனது மனைவியை துப்பாக்கியால் சுட்ட கணவர் கைது!

**கிளிநொச்சியில் கொடூர சம்பவம்**

**கிளிநொச்சி, ஏப். 13**

**கர்ப்பவதியான மனைவியை இடியன் துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்திய கணவனை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

**இந்தக் கொடூர சம்பவம் அக்கராயன்குளம் - கரித்தாஸ் குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.**



சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

காயமடைந்த பெண்ணும் காயத்தை ஏற்படுத்தியவரும் காதலித்து திருமணம் செய்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், கணவர் மது போதைக்கு அடிமையாகியுள்ளார். இதனால், குடும்பத்தில் அடிக்கடி சண்டைகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறே நேற்று சண்டையின் போதே 5 மாத கர்ப்பவதியான தனது மனைவியை இடியன் துப்பாக்கியால் கணவர் சுட்டுக் காயப்படுத்தியுள்ளார். காயமடைந்த பெண் 33 வயதுடையவர் என்பதுடன் 2 பிள்ளைகளின் தாயும் ஆவார்.

சம்பவத்தில் காயமடைந்த பெண் அக்கராயன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தனது மனைவியையே சுட்ட 40 வயதான நபரை அக்கராயன் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# பரந்தன் ரயில் நிலையத்தின் ஊழியர்கள் மீது தாக்குதல்!

## மது அருந்துவதை தடுத்ததால்

கிளிநொச்சி, ஏப். 13

பரந்தன் புகையிரத நிலையத்துக்குள் புகுந்து குழு ஒன்று நடத்திய தாக்குதலில் நிலையத்தின் அதிபர் உட்பட இரு ஊழியர்கள் காயமடைந்தனர். அத்துடன், நிலையத்தின் சொத்துக்களும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

புகையிரத நிலையத்தில் குழு ஒன்று மதுபானம் அருந்தியுள்ளது. அங்கு வைத்து மது அருந்த வேண்டாம் என்றும் அங்கிருந்து வெளியேறுமாறும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், ஆத்திரமடைந்த அந்தக் குழு புகையிரத நிலைய அதிபரையும் ஊழியரையும் தாக்கிக் காயப்படுத்தியது. அத்துடன், நிலையத்தின் சொத்துகளையும் தாக்கி சேதப்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தாக்குதல் நடத்திய குழுவை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

புகையிரத நிலையத்தின் அதிபரும் ஊழியரும் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதி நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், ஏப். 13

இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து 30 நாட்கள் உணவை ஒறுத்து பேராடி உயிர் நீத்த அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நினைவேந்தலில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ. விஜயகுமார், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சி. ஜெல்சின், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் அபிரக்சன், மற்றும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத் தலைவர் த. சிவரூபன் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ-03)

# யாழ். நகர கருவாட்டு கடைகள்மீது சுகாதார பரிசோதகர்கள் சோதனை!

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழப்பாணம் மாநகரிலுள்ள கருவாட்டு கடைகளில் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பாலமுரளியின் அறிவுறுத்தலின் பிரகாரம் யாழ். மாநகர் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் மற்றும் மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் இந்தப் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தெருவோரம் தூசுகள், மாசுகளால் மாசடையக்கூடிய வகையில் கருவாடுகள் வைத்திருந்த கடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். தெருவோரம் கருவாடுகள் வைத்து விற்பனை செய்வதாயின் கண்ணாடி பெட்டிக்குள் வைத்து விற்பனை செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், கருவாடுகளை தூசு படியும் வகையிலும், அழுக்கான கறள் படிந்த கம்பிகளிலும் குத்தி தொங்கவிடப்பட்டிருந்த கடை உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கருவாடுகள் அனைத்தையும் பொலித்தீனால் மூடி தூசுகள் படாதவாறு காட்சிப்படுத்துமாறும் பொது சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டது.



மேற்படி குறைபாடுகள் நிவர்த்தி செய்ய இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் கால அவகாசத்தின் பின்னரும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொது சுகாதார பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்டது.

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை; வடமராட்சி கிழக்கில் 141 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 13

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் மருதங்கேணி, அம்பன், முள்ளியான் ஆகிய மருத்துவமனைகளில் நடத்தப்பட்ட கண்பரிசோதனை முகாம்களில் 141 பேர் இலவச கண்புரை சத்திர சிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலவச கண்புரை சத்திரசிகிச்சை தொடர்பாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில், யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளிகளுக்கான இலவச கண்புரை சத்திரசிகிச்சை திட்டம் யாழ். போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக சில அமைப்புகளின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் மருதங்கேணி, அம்பன், முள்ளியான் ஆகிய மருத்துவமனைகளில் நடத்தப்பட்ட கண்பரிசோதனை முகாம்களில் 141 பேர் கண்புரை சத்திர சிகிச்சைக் காகத் தெரிவு செய்யப்பட்டுள் ளனர்.

இவர்களில் முதல் கட்டமாக 50 பேருக்கு எதிர்வரும் 18 ஆம் திகதியும், இரண்டாம் கட்டமாக 50 பேருக்கு எதிர்வரும் 25 ஆம் திகதியும் ஏனையவர்களுக்கு மே மாதத்திலும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் இருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கும் சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அவர்களை மீள மருதங்கேணிக்கு அழைத்து செல்வதற்கும் போக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதார திணைக்களத்தால் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 18ஆம் தகதி சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கு முதல்நாளான எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மருதன்கேணி, அம்பன், முள்ளியான் மருத்துவமனைகளுக்கு சமுகம் தரல் வேண்டும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி சத்திரசி கிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் முதல்நாளான 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி மருத்துவமனைகளுக்கு சமுகம் தர வேண்டும்.

சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அன்றைய தினம் மாலையிலேயே அவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் இருந்து மருதங்கேணிக்கு அழைத்து செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் திகதி சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு ஏற்கனவே சுகாதார திணைக்களத்தால் தொலைபேசிமூலம் நேரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட நோயாளர்களை உரிய நேரத்தில் சமுகமளித்து இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# பல்கலைக்கழகக் கற்பித்தல் நடவடிக்கை திங்கள் ஆரம்பம்!

## விரிவுரையாளர்களின் தொழில்சங்கம்

கொழும்பு, ஏப். 13

**எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பல்கலைக்கழக கற்பித்தல் செயல்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழில்சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.**

நேற்று புதன்கிழமை அதிகாலை வரை தொழிற்சங்க உறுப்பினர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு கடந்த மார்ச் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முறையற்ற வரி கொள்கை உள்ளிட்ட சில விடயங்களை வலியுறுத்தி இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

எனினும், உயர்தர பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுவது தொடர்பில் குறித்த கலந்துரையாடலின் போது இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரயில் தண்டவாளங்களை இறக்குமதி செய்ய முடிவு!

கொழும்பு, ஏப். 13

சீனாவில் இருந்து 10 ஆயிரம் ரயில் தண்டவாளங்களை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் இந்த ரயில் தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த மாத இறுதியில் குறித்த ரயில் தண்டவாளங்கள் நாட்டிற்கு கிடைக்கப்பெறும் என போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, ரயில் மார்க்கங்களை பராமரிப்பதற்கு அவசியமான ஆணிகள் உள்ளிட்ட பல்வேறு உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் தண்டவாளங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர், ரயில் மார்க்கங்களை திருத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என அந்தத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

ரயில் மார்க்கங்கள் சேதமடைந்துள்ளதன் காரணமாக பல இடங்களில் ரயில்களின் பயண வேகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கரையோர ரயில் பாதிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக கொழும்பு கோட்டை முதல் பாணந்துறை வரையிலான ரயில்களின் பயண வேகத்தை மணிக்கு 30 கிலோமீற்றர் வரை குறைப்பதற்கு புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

# மத்திய வங்கி பெட்டகத்திலிருந்த ஐம்பது இலட்சம் ரூபாய் மாயம்!

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 13

இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபாய் பணம் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது குறித்து மத்திய வங்கியின் அதிகாரிகளால் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணைகளையும் இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# போலி 5,000 ரூபாய் தாள்களுடன் இரு சந்தேகநபர்கள் கைதாகினர்!

கொழும்பு, ஏப். 13

5,000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 17உடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அம்பாந்தோட்டை - கட்டுவன பகுதியில் வைத்து போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அந்த நாணயத்தாள்களை வழங்கிய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரின் வீடு சோதனை உட்படுத்தப்பட்டதோடு அங்கிருந்து போலி நாணய தாள்களை அச்சிடும் இயந்திரம் மற்றும் மடிக்கணினி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 37 மற்றும் 38 வயதுடைய கடுவன பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் வலஸ்முல்லை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# தந்தையும் தனயனும் வாள்வெட்டில் காயம்!

கொழும்பு, ஏப். 13

தகராறால் வாளால் வெட்டப்பட்ட தந்தையும் மகனும் காயங்களுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், இவர்கள் மீது வாள்வெட்டை நடத்திய நபரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - மொறட்டுவை - கட்டுபெத்த பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு முன்பாக இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# மசாஜ் நிலையத்தில் சடலம் மீட்கப்பட்டது

கொழும்பு, ஏப். 13

மசாஜ் நிலையம் ஒன்றில் 42 வயது நபர் சடலமாக மீட்கப்பட்டார். கொழும்பு - கந்தானை பகு தியிலுள்ள மசாஜ் நிலையம் ஒன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர், நேற்றுமுன்தினம் இரவு மசாஜ் நிலையத்துக்கு சென்றிருந்தார். இந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்து காணப்பட்டார்.

மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மதுபான நிலையங்கள் இன்றும் நாளையும் பூட்டு!

கொழும்பு, ஏப். 13

தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் நாட்டிலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படவுள்ளன என்று கலால்வரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அறிக்கை மூலம் கலால்வரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன. 1913 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் தயாரிப்பு தொடர்பில் தகவல் வழங்க முடியும் என்றும் கலால் வரி திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

# நீரில் மூழ்கி இரு இலங்கையர் அவுஸ்திரேலியாவில் மரணம்!

சிட்னி, ஏப். 13

அவுஸ்திரேலியாவின் வடக்கு குயின்ஸ்லாந்தில் நீர் நிலையொன்றில் நீராடிய இரு இலங்கையர்கள் மூழ்கி உயிரிழந்தனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு குழுவினர் குயின்ஸ்லாந்தில் உள்ள கிரிஸ்டல் கேஸ் கேட்ஸ் நீர் நிலையில் நீராடச் சென்றுள்ள போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது 21 மற்றும் 59 வயதுகளையுடைய இரு ஆண்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். (ஐ)

# ஹெரோயின் போதை பொருளுடன் யாழ்ப்பாணத்தில் பெண் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 13

ஒட்டுமடம் - பொம்மை வெளியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 5.5 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 70 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளி 5ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த 32 வயது பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

உயிர்க்கொல்லி போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவதாக நீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்த பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ஐ)

# மது அருந்த வேண்டாம் என்றவரை தாக்கிக் கொன்ற சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஏப். 13

கடைக்கு முன்பாக மதுபானம் அருந்த வேண்டாம் என்று கூறியவர் இரும்பு கம்பியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டார். அத்துடன், இந்தத் தாக்குதலை தடுக்க முயன்ற கொலையானவரின் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு குருநாகல், பிங்கிரிய பகுதியில் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிங்கிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகொல்லாகம பிரதேசத்தில் நபர் ஒருவர் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தாக்குதலை நடத்திய சந்தேகநபர், கொலையான நபரின் கடைக்கு அருகில் மற்றொரு நபருடன் மதுபானம் அருந்தியுள்ளார். இதை அவதானித்த கடையின் உரிமையாளரான கொலையான நபர், அங்கு நின்று மதுபானம் அருந்த வேண்டாம் என்று அவர்களுக்கு கூறியுள்ளார். இதையடுத்து இரு தரப்பினர் இடையேயும் தர்க்கம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து தாக்குதலை நடத்திய சந்தேகநபர் வீட்டுக்கு சென்று அங்கிருந்து இரும்புக் கம்பியை எடுத்து வந்து கடைக்காரரை தாக்கிக் கொன்றார். அத்துடன், தாக்குதலை தடுக்க முயன்ற கொலையான நபரின் மனைவியையும் தாக்கியுள்ளார். இதில் அவர் பலத்த காயமடைந்தார். அவர் குளியாப்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

கொலை சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு முதுகெலும்பு இல்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஏப். 13

தேர்தல் ஆணைக்குழு கடந்த ஆண்டு செப்ரெம்பரிலேயே தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கலாம் என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். சுயாதீனமானது என்று கூறினாலும் ஆணைக்குழு முதுகெலும்பின்றியே செயல்பட்டுக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித கலந்துரையாடல்களும் நடைபெறவில்லை. எமக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப்படவுமில்லை - என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

“தமது நிபந்தனைகளை செயல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் சிவில் சமூக பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. தேர்தலை நடத்துவதற்கான நிதியை விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட நிபந்தனையையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை.

தமது நிபந்தனைகளை செயல்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக நாணய நிதிய தூதுக்குழுவொன்று எதிர்வரும் ஜூன் மாதத்தில் இலங்கை வரவுள்ளது. நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமைக்காக ஜனநாயக மீறல்களுக்கு இடமளிக்க முடியாது.

நாணய நிதியத்துடன் சுமுகமான பேச்சுகளை முன்னெடுத்து மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதார சுமைகளை அரசாங்கத்தால் குறைத்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு எந்த முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.



அண்மையில், நாட்டில் முன்னெடுக்கப்பட்ட அமைதியான ஆர்ப்பாட்டங்களில் படையினரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கண்ணீர்ப்புகை பிரயோகத்தால் ஒருவர் உயிரிழந்தார். இவ்வாறான நடவடிக்கைகள் ஜூனில் சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு வரும் போது அரசாங்கத்துக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. எமக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப்படவுமில்லை - என்றும் கூறினார். (ஐ)

# புத்தாண்டுகால மோசடிகள்; விழிப்புடன் செயல்படுங்கள்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, ஏப். 13

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்பு கருதி பொலிஸ் அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தில் பல்வேறு மோசடி சம்பவங்கள் இடம்பெறலாம். எனவே, இவை குறித்து பொதுமக்கள் அவதானமாக செயல்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

மேலும், காலாவதியான பொருட்கள் கவர்ச்சிகரமான முறையில் குறைந்த விலைகளில் விற்கப்படுகின்றன. இதில் கவனமாக இருக்க வேண்டும். முங்கமைக்கப்பட்ட குற்றங்களை மேற்கொள்ளும் குழுக்கள் மற்றும் நபர்கள் போலி நாணயத்தாள்களை புழக்கத்தில் விடுகின்றனர்.

மேலும் பொருள் கொள்வனவுக்கு அல்லது இதர தேவைகளுக்கு வெளியில் செல்பவர்கள் பெறுமதிமிக்க தங்க நகைகள் அணிவதை தவிர்த்து கொள்ள வேண்டும். பணப்பை உள்ளிட்ட பெறுமதி மிக்க பொருட்கள் குறித்து அவதானமாக செயல்பட வேண்டும் . ஏனெனில், பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை மேற்கொள்ளும் தரப்பினர் பொது இடங்களிலேயே அதிகம் சுற்றித் திரிகின்றனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கண்காணிக்க அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்படும்.

பொது மக்களின் பாதுகாப்பு கருதி நெரிசலான பகுதிகளில் பாதுகாப்பு பிரிவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் குற்றப்புலனாய்வு பிரிவினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். சில பகுதிகளில் பொலிஸ் அதிகாரிகள் சாதாரண உடையில் இருப்பர்.

மேலும், சித்திரை புத்தாண்டு விசேட விழாக்களை ஏற்பாடு செய்பவர்கள் அதில் பங்கேற்பவர்களின் பாதுகாப்பையும் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் பொலிஸ் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து:

# உரிய தரப்பினருக்கு எதிராக சிங்கப்பூர் நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, ஏப். 13

எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்கு கப்பல் தீ விபத்தால் ஏற்பட்ட சமுத்திர மாசடைவு தொடர்பில் உரிய தரப்பினருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விபத்து தொடர்பில் சிங்கப்பூர் நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

நீர்கொழும்பு பகுதியை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எம்-வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் சமுத்திர மாசடைவு தடுப்பு சட்டத்தின் 26 ஆவது அத்தியாயத்தின் தண்டனை சட்டத்தின் பிரகாரம் கப்பல் உரிமையாளர் அல்லது கப்பலை இயக்கியவர் அல்லது அந்த கப்பலின் இலங்கை பிரதிநிதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான சகல தகவல்களும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதற்கமைய சட்டமா அதிபர் திணைக்களம் கப்பல் விபத்து தொடர்பில் தண்டனை சட்டகோவைக்கு அமைய உரிய தரப்பினருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இந்த கப்பல் விபத்தால் கடல் வளத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மதிப்பீடு செய்வதற்காக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையால் பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கிய வகையில் நியமிக்கப்பட்ட குழுவினர் சமர்ப்பித்த அறிக்கை சட்டமாதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எம். வி எக்பிரஸ் பேர்ள் கப்பல் உரிமையாளர் நிறுவனத்திடமிருந்து நட்டஈடு பெற்றுக் கொள்வதற்காக சட்டமாதிபர் திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அவுஸ்ரேலிய நாட்டின் சட்ட நிறுவனத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள் ளப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக அமைச்சரவைக்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டு சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்ய அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிதி ஒத்துழைப்புக்களுக்காக அமைச்சரவை அனுமதியுடன் நிதி நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள் ளப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற அதிகாரம் உள்ளது என அவுஸ்திரேலிய நீதி நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கப்பல் உரிமையாளர் உட்பட பிரதான தரப்பினர் அனைவரும் சிங்கப்பூர் நாட்டில் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் என சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

கப்பல் நிறுவனம் ஐக்கிய இராச்சிய நீதிமன்றத்தில் நட்டஈடு வரையறை செய்யும் வழக்கு நடவடிக்கையில் 19 ஆயிரம் மில்லியன் பவுன்ஸ் நட்டத்தை வழங்க உத்தரவை பெற்றுக்கொண்டுள்ளது. இந்த வழக்கு நடவடிக்கையில் கலந்து கொண்டு அந்த உத்தரவை மாற்றியமைக்க முதல் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடல்சார் வளங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பல் துறைசார் நிபுணர்கள் முன்வைத்துள்ள மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நிறுவனங்களின் இறுதி அறிக்கையை பெற்றுக் கொள்ள ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கப்பல் விபத்தால் சமுத்திர வளங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக் கொள்வதற்காக கடல்சார் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணக்கமாக செயல்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 4 மாடிகளுக்கு மேல் கட்டடங்களை நிர்மாணிக்க நுவரெலியாவில் தடை!

## அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படுகிறது

கொழும்பு, ஏப். 13

நுவரெலியாவில் 4 மாடிகளுக்கு மேல் கட்டடங்களை நிர்மாணிப்பதை தடை செய்வதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனையின் அடிப்படையில் இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

நுவரெலியாவில் உயரமான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கியமை தொடர்பில் ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார். நுவரெலியா “லிற்றில் இங்கிலாந்து” என்ற பெயரால் பெற்று வந்த தனது வரலாற்றுத் தோற்றத்தை இழந்துவிட்டது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மேலும், பெரிய கட்டடங்களை நிர்மாணிப்பதில் கவனம் செலுத்துவதைவிட சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுப்பதற்கான இனிமையான சூழலை உருவாக்கி நுவரெலியாவை அபிவிருத்தி செய்ய வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நுவரெலியா நகரில் முறையான வடிகால் அமைப்பு இல்லாததை சுட்டிக்காட்டிய அவர், இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான அவசர வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிறைவுடன் நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை எடுத்துக் காட்டிய ஜனாதிபதி, முறையான திட்டத்துக்கு அமைவாக வசதிகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். (ஐ)

# கடத்தப்பட்ட 3 தமிழ் சிறுமிகள் மீட்கப்பட்டனர்!

## 3 சந்தேகநபர்களும் கைது

கொழும்பு, ஏப். 13

இரத்தினபுரி - பலாங்கொடையில் தமிழ் பாடசாலையில் கல்வி கற்கும் 3 மாணவிகள் கடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலை விடுமுறை தினத்தன்று மாணவிகளை கடத்திய 3 இளைஞர்கள் அவர்களை குருவிட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் ஒரு வார காலம் தங்க வைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞர்களை கைது செய்த பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை, எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மீட்கப்பட்ட மாணவிகள் மருத்துவ பரிசோதனைகளுக்காக பலாங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தின் நிலைய பொறுப்பதிகாரி பாலிகா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஐ)

# நேபாளத்தை மீண்டும் இந்து நாடாக்க முயற்சியா?

# இந்து பல்கலைக்கழகத்தை உருவாக்க நேபாளம் முயல்வது ஏன்?

நேபாளத்தின் புஷ்ப கமல் தஹல் பிரசண்டா அரசு, இந்து மத ஆராய்ச்சி மற்றும் கலாச்சார தூதாண்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் 'சிறிபசுபதி இந்து பல்கலைக்கழகம்' நிறுவப்பட வேண்டியதன் அவசியத்திற்கான ஆய்வைத் தொடங்கியுள்ளது.

ஆனால் போதிய ஏற்பாடுகள் இல்லாமல் இது போன்ற பல்கலைக்கழகம் அமைக்கப்படக் கூடாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

மத்திய சுற்றுலா மற்றும் கலாசார அமைச்சர் சுதன் கிராதி, சமய சார்பின்மைக்காக வாதிடுகிறார், அதோடு ஒரு பல்கலைக்கழகத்தின் தேவை குறித்து ஆய்வு செய்ய ஒரு குழுவை அமைத்துள்ளார்.

கிராதி, மாவோயிஸ்ட் கட்சியில் தீவிர சித்தாந்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். முதல்முறையாக அவர் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

அரசால் அமைக்கப்பட்ட குழு பல்கலைக்கழகம் தொடர்பான பணிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் இந்து மதம் மற்றும் வேத கலாச்சாரம் பற்றிய ஆய்வு நேபாள சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர்.



### பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான ஆய்வு

நேபாளத்தில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் இந்துக்கள். மாவோயிஸ்ட் இயக்கத்திற்குப் பிறகு நேபாளம், இந்து மேலாதிக்க முடியாட்சியில் இருந்து கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசாக மாற்றப்பட்டது. அதன் பிறகு சில பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பெயர்கள் மாற்றப்பட்டன.

மாவோயிஸ்ட் கட்சியின் தலைவர் பிரசண்டா மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்றுள்ளார். அவரது அரசின் சுற்றுலாத் துறை அமைச்சரான கிராதி, 'பசுபதி இந்து பல்கலைக் கழகம்' அமைப்பதன் அவசியத்தை ஆய்வு செய்யும் பொறுப்பை, பேராசிரியர் டாக்டர் ஜக் மான் குருங் தலைமையிலான குழுவிடம் அளித்துள்ளார்.

“இவ்வளவு பணிகளை முடித்துள்ளோம் என இரு வாரங்களுக்கு முன்பு அவர்கள் எங்களிடம் கூறினார்கள். பசுபதி இந்து பல்கலைக்கழகத்தின் வடிவம் என்ன, எப்படி முன்னெடுத்து செல்ல வேண்டும், அதில் என்னென்ன பாடங்கள் கற்பிக்கப்படும் ஆகிய விஷயங்கள் பற்றிய முழு அறிக்கை இன்னும் வரவில்லை,” என்று சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ராஜேந்திர குமார் கேசி கூறினார்.

ஆய்வறிக்கை வந்த பிறகு அமைச்சகம் 'பொருத்தமான' முடிவை எடுக்கும் என அவர் குறிப்பிட்டார்.

### “கலாசார தூதாண்மை வலுவாகும்”

'பசுபதி இந்து பல்கலைக்கழகம்' கல்வி, சுற்றுலா போன்ற துறைகளை மேம்படுத்தும் என நம்புவதாக சில நாட்களுக்கு முன் நிகழ்ச்சி ஒன்றில் அமைச்சர் கிராதி கூறியிருந்தார்.

'சமயசார்பற்ற நாட்டில் எல்லா மதங்களும் மதிக்கப்படுகின்றன. இன்று வரை நாம் வெளிநாட்டு பொருட்களைத் தேடிக் கொண்டிருந்தோம். ஆனால் உள்நாட்டில் இருந்து எதுவும் கிடைக்கவில்லை. நமது நம்பிக்கைகள், மதிப்புகள் மற்றும் பாணிகளை உள்ளூர்மயமாக்க முடியவில்லை” என்று அவர் கூறினார்.

“உலகம் முழுவதும் அறிவுஜீவிகளை உருவாக்குவதே எங்கள் குறிக்கோள். இது கலாசார தூதாண்மையை வலுப்படுத்துவதற்கான ஒரு வழியும் ஆகும்” என்று அவர் கூறினார்.

ஆன்மிகப் பயிற்சிக்கு நேபாளம் சிறந்த இடம் என்றும் நேபாளத்தின் அசல் அம்சங்களைக் கொண்ட பாடப் பிரிவுகளைச் சேர்த்துக்கொண்டு புதிய பல்கலைக்கழகம் முன்னேறும் என்றும் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் குருங் கூறினார்.

“உலகம் முழுவதிலும் இருந்து மக்கள் இந்தப் பல்கலைக்கழகத்திற்கு தத்துவம் மற்றும் நேபாளம் குறித்து படிக்க வருவார்கள். நேபாளம் தொடர்பான பாடங்களைப் படிப்பது மற்றும் ஆராய்ச்சி செய்வது பற்றி நாங்கள் குறிப்பிட்டுள்ளோம்,” என்றார் அவர்.

“உலகம் முழுவதும் மறைந்து போன முற்கால வஜ்ராயன பௌத்தம், உலகில் வேறு எங்குமே இல்லாத முண்டும் கிராத் மதம் போன்ற மதங்கள் பற்றி கற்பிக்கப்படும்.

நேபாளத்தில்கூட அழிந்துவிட்ட, குருங் பழங்குடியின சமூகத்தின் பான் பாரம்பரியம் குறித்தும் இங்கே பாடங்கள் இருக்கும். நேபாளத்தின் மற்ற கலாசார பாரம்பரியம், செபாங் மற்றும் ரவுதே போன்ற சமூகங்களின் வாழ்க்கை முறை பற்றியும் நாங்கள் கற்பிப்போம்,” என்று அவர் குறிப்பிட்டார்.

நேபாளம் கிழக்கத்திய தத்துவம் மற்றும் உயர்நிலை ஆன்மீக பயிற்சிக்கு ஏற்ற இடம் என்பதை அவர் விரிவாக விளக்கினார். பசுபதிநாத் இந்து பல்கலைக்கழகத்தை நடத்துவதற்கான நிதிப் பொறுப்பு ஒரு சவாலாக இருக்காது என்று டாக்டர் குருங் தெரிவித்தார்.

### வளங்களைச் சேர்ப்பது கடினம்

தற்போது நேபாளத்தில் ஒரு டஜனுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. அதே நேரத்தில் மாகாண அரசுகள் சில புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதை நோக்கி நகர்கின்றன.

நேபாள சமஸ்கிருத பல்கலைக்கழகம், மதம் மற்றும் கலாசாரத்தில் கவனம் செலுத்துகிறது. அதே நேரத்தில் லும்பினி பௌத்த பல்கலைக்கழகம் மற்றும் ராஜ ரிஷி ஜனக் பல்கலைக்கழகம் தொடர்பாகவும் பணிகள் நடந்து வருகின்றன.

புதிய பல்கலைக்கழகம் அமைப்பது



அவ்வளவு எளிதானது அல்ல என்று காத்மாண்டு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சுரேஷ்ராஜ் ஷர்மா கூறினார்.

'நேபாளத்தில் சமஸ்கிருத பல்கலைக் கழகம் உள்ளது. ஆனால் அதற்கு அரசு நிதியுதவி அளிக்காவிட்டால் அதுவும் செயல்பட முடியாது. திரிபுவன் பல்கலைக் கழகத்தின் நிதிச் சுமையும் அரசின் மீது உள்ளது,” என்று அவர் தெரிவித்தார்.

நிதியுதவி அல்லது பிற ஆதாரங்களில் இருந்து பணம் பெறப்பட்டால், மதம் தொடர்பான கல்வி நோக்கங்களுக்காக ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவது எளிதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

“கல்லூரியை துவங்கி அதை பல்கலைக் கழகமாக மாற்றுவது சிறந்தது. ஆனால் நேரடியாக பல்கலைக்கழகத்தைத் திறப்பதால் பொறுப்புகள் அதிகரிக்கின்றன. இது அவ்வளவு எளிமையானது என்று நான் நினைக்கவில்லை,” என்றார் அவர்.

பல நாடுகளில் முதலில் பல்கலைக்கழகம் அமைப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச பணம், நிலம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவை நிர்ணயம் செய்யப்படுகின்றன என்று பேராசிரியர் ஷர்மா குறிப்பிட்டார்.

அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்த பிறகே பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்றார் அவர்.

### இந்து தத்துவம் கற்கும் இடம் எங்கே?

பசுபதி இந்து பல்கலைகழகத்தைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் தெரியவில்லை என்று நேபாள சமஸ்கிருத பல்கலைகழகத்தின் முன்னாள் துணை வேந்தர் குல் பிரசாத் கொய்ராலா கூறினார்.

“பல்கலைக்கழகத்தைத் திறப்பது குறித்து தற்போது பல்வேறு ஊகங்கள் வெளியிடப்படுகின்றன. நேபாள சமஸ்கிருத பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்தின் 12 முக்கியப் பாடங்கள் உள்ளன.

அதை 24 ஆக அதிகரிக்க மேலும் 12 நவீன பாடங்களைச் சேர்க்கலாம். ஒரு பாணியை உருவாக்குவது என்பது ஒத்த பாணியை மற்றொரு ஒத்த பாணியுடன் இணைப்பதாகும்,” என்று அவர் குறிப்பிட்டார்.

போதிய திட்டமிடல் மற்றும் ஆய்வு இல்லாமல் நிறுவப்படும் பல்கலைக்கழகங்கள், நேபாளம் போன்ற நாட்டிற்குத் தாங்க முடியாத அளவுக்கு நிதிச்சுமையை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார்.

“நேபாள சமஸ்கிருதப் பல்கலைக்கழகத்தில் ஒரு துறையைத் திறந்து பௌத்த தத்துவத்தைக் கற்பிக்க முடியும். எனவே தனி பௌத்த பல்கலைக் கழகம் நிறுவ வேண்டிய அவசியம் இல்லை.

இப்போது யோக்மாயா ஆயுர்வேத பல்கலைக்கழகத்தைத் திறப்பது பற்றிப் பேசப்படுகிறது. சமஸ்கிருத துறையில் ஆச்சார்யா வரை எட்டு வகையான யோகாக்கள் கற்பிக்கப்படுகின்றன. சமஸ்கிருதப் பல்கலைக் கழகத்தின் ஒரு கிளையாக இந்து மதத்தைப் பற்றிய ஆராய்ச்சியை வைப்பது பொருத்தமாக இருந்திருக்கும்,” என்று குல் பிரசாத் கொய்ராலா கூறினார்.

### இந்து தேசத்திற்கான கோரிக்கை

பசுபதிநாத் இந்து பல்கலைக்கழகம் நிறுவப்படுவதன் பின்னணியில் உள்ள நோக்கமும் காரணமும் தனக்குப் புரியவில்லை என்று காத்மாண்டுவில் உள்ள வால்மீகி வித்யாபீடத்தின் பேராசிரியை பிரியம்வதா ஆச்சார்யா கஃப்லே கருத்து தெரிவித்தார்.

'திரிபுவன் பல்கலைக்கழகத்தின் கீழ் கலாச்சாரம் படித்தால், பசுபதிநாத் மற்றும் பிற பாடங்கள் அங்கு கற்பிக்கப்படுகின்றன. இந்துக்கள் அதிக அளவில் இருப்பதால் நாட்டில் எல்லாமே இந்துமயமாக உள்ளது. எனவே வெளித்தோற்றத்தைப் பற்றிப் பேசுவதற்கு பதிலாக, மதம் மற்றும் கலாசாரத்தில் நம்பிக்கை கொண்ட மக்களுக்கு ஆதரவான உள்கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்,” என்று அவர் கூறினார்.

பக்தர்கள் தங்குவதற்கு சத்திரங்கள், சமையலறை போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான புதிய ஆய்வுக்காக அரசு அதிகாரிகள் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

அதேநேரம், ராஷ்டிரிய பிரஜாதந்திர கட்சி, ராஷ்ட்ரிய பிரஜாதந்திர கட்சி நேபாள் போன்ற கட்சிகள், நாட்டை மீண்டும் இந்து நாடாக மாற்ற வேண்டும் என்று கோரி வருகின்றன.

### இந்தியா-நேபாள சமய தூதாண்மை

சமீப காலமாக, நேபாளத்தின் அண்டை நாடான இந்தியாவில் இந்து அரசியலின் வேர்கள் ஆழமடைந்து வருகின்றன. 'ராமாயண சர்க்யூட்' உள்ளிட்ட மத சுற்றுலாவுக்கு இரு நாட்டு அதிகாரிகளும் முக்கியத்துவம் அளித்து வருகின்றனர்.

இந்தியாவின் இந்து சமூகம் பசுபதிநாதருக்கு மிகுந்த மரியாதை அளிக்கிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோதி பசுபதிநாத் தவிர, முக்திநாத் மற்றும் ஜனக்பூர் தாம் ஆகிய இடங்களுக்குச் சென்றுள்ளார்.

வாரணாசி உட்பட இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கு மதக் கல்விக்காக நேபாளிகள் பலர் செல்கின்றனர்.

அதேபோல் இந்தியர்கள் நேபாளத்தை மத சுற்றுலா மற்றும் ஆராய்ச்சிக்கான இடமாகக் கருதி வருகின்றனர்.

இந்து பல்கலைக்கழகம் நிறுவப்பட்டவுடன் இந்த வகையான பரிமாற்றம் மேலும் விரிவடையும் என்று சில நிபுணர்களின் ஆய்வு குறிப்பிடுகிறது. ●

# இந்துத் தமிழர்கள்?

நிலாந்தன்




இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள இந்து அமைப்புகள் கடந்த ஐந்தாம் திகதி, இலங்கைத் தமிழ் இந்துக்களுக்கு நீதி கோரி ஒரு போராட்டத்தை முன்னெடுத்தன. இலங்கையில் இந்து ஆலயங்கள் இடிக்கப்படுவதும் இந்துக்களுக்கு தீங்கு இழைக்கப்படுவதும் ஒரு கலாசார இனப்படுகொலை என்றும் மேற்படி இந்து அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கும் ஒரு காலகட்டத்தில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினையை இந்து தமிழர்களின் பிரச்சினையாக குவிமையப்படுத்தி இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியை கையாள்வதற்கு ஈழத் தமிழர்கள் மத்தியில் தாயகத்தில் ஒரு பகுதியினரும் புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரும் தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர்களின் ஒரு பகுதியினரும் கடுமையாக உழைத்து வருகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் வசிக்கும் காசி ஆனந்தன் உட்பட ஈழத் தமிழர்கள் சிலர் அவ்வாறான அணுகுமுறையை முன்வைத்து ஓர் அமைப்பையும் உருவாக்கியிருந்தார்கள். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அதன்பின் கடந்த ஆண்டு புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலரின் ஒருங்கிணைப்பில் நாட்டில் உள்ள முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள் புதுடில்லியில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது மாநாடும் புதுடில்லியில் நடத்தப்பட்டது. இம்மாநாடுகளில் டெல்லியில் உள்ள சிவசேனை அமைப்பைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றினார்கள்.

இந்திய ஆளுங்கட்சியாக உள்ள பாரதிய ஜனதாவை அணுகுவதற்கு இந்துத்துவாவை ஒரு வாகனமாக கையாள வேண்டும் என்ற முனைப்பு ஈழத் தமிழர்கள் மத்தியில் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. அதற்குப் பின்வரும் காரணங்கள் உண்டு.

முதலாவது காரணம் தமிழகத்தைச் சேர்ந்த திராவிட கட்சிகளில் தங்கி இருப்பதனால் எந்தப் பயனும் இல்லை என்ற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டது. குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் கலைஞர் கருணாநிதி நடந்து கொண்ட விதம் தொடர்பில் ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் அவர் மீதும் அவருடைய கட்சி மீதும் தொடர்ந்து வெறுப்போடு காணப்படுகிறார்கள். இந்த வெறுப்பும் பாரதிய ஜனதாவை நோக்கிப் போக ஒரு காரணம்.

இரண்டாவது காரணம், காங்கிரஸ் கட்சி மீதான எதிர்ப்பும் பாரதிய ஜனதாவின் மீதான விருப்பமும். காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்துடன் ஒப்பிடுகையில், பாரதிய ஜனதாவின் ஆட்சிக் காலங்களில் ஒப்பீட்டளவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான முடிவுகள் எடுக்கப்பட்டதான ஒரு நம்பிக்கை ஈழத் தமிழர்கள் மத்தியில் உண்டு. எனவே பாரதிய ஜனதாவின் ஆட்சிக்காலத்தில் ஈழத் தமிழர்களுக்கு நல்லது நடக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

மூன்றாவது காரணம், ஈழத்தில் சிவசேனை, உருத்திர சேனை போன்ற அமைப்புக்கள் துடிப்பாகச் செயற்பட்டு வருகின்றன. மலையகத்திலும் ஆர். எஸ்.எஸ் பரவலாக கால் பதித்து வருகின்றது. இந்த அமைப்புகளின் ஊடாக ஈழத்தமிழ் அரசியலை இந்துத்துவா தடத்தில் ஏற்றுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்கு உலகில் உள்ள எந்த பிசாசோடும் கூட்டிச் சேர்வதற்கு தயாராக காணப்பட்டன, காணப்படுகின்றன. அவ்வாறு ஒரு பெரிய இனம் எந்த பிசாசோடும் கூட்டுச் சேர்ந்து தமிழர்களை ஒடுக்கலாம் என்றால், ஒரு சிறிய இனம் மத ரீதியாக இந்திய ஆளும் கட்சியை கையாள்வதில் என்ன தவறு உண்டு? என்று அவர்கள் கேட்கிறார்கள்.

மேற்கண்ட காரணங்களை முன்னிறுத்தி ஈழத் தமிழ் அரசியலை இந்து அரசியலாக சுருக்குவதோடு இந்திய மத்திய அரசாங்கத்தை அணுகும் முயற்சிகளில் தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ் பரப்பிலும் உள்ள பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் சக்திகளும் தொடர்ச்சியாக உழைத்து வருகின்றன.

இதில் தொகுத்துக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வழிவந்த அமைப்புகளும் உட்பட விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் இப்பொழுது மொழி உண்டு, தேவையான பணம் உண்டு, உலகம் முழுவதும் தொடர்புகள் உண்டு. எனவே அவர்கள் தமிழகத்திலும் டெல்லியிலும் உள்ள பாரதிய ஜனதாக்கட்சிப் பிரமுகர்களை எளிதாக அணுகுகிறார்கள், நெருங்கி வருகிறார்கள். அதன்மூலம் தாயகத்தில் வாழும் மக்களுக்கு எதையாவது செய்யலாமா என்று சிந்திக்கின்றார்கள்.

ஆனால் அவ்வாறு சிந்திக்கும் அமைப்புகளும் தனி நபர்களும் தாயகத்தில் மக்களாணையைப் பெற்றவர்கள் அல்ல என்பதே இந்த ராஜதந்திரத்தில் உள்ள அடிப்படைப் பலவீனம் ஆகும். ராஜதந்திரம் எனப்படுவது அதிகாரத்தின் கலை. ஒரு அதிகார மையம் தனது நலன்சார் நோக்கு நிலையில் இருந்து ஏனைய அதிகார மையங்களோடு இடையூடாடுவது தான் ராஜதந்திரம். அப்படிப்பார்த்தால் ஈழத் தமிழர்கள் மத்தியில் அதிகார மையமாக இருப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகளும் தான். ஆனால் தாயகத்தில் பலமாக உள்ள கட்சிகள் மேற்கண்டவாறு இந்துத்துவா ராஜதந்திரத்தை பின்பற்றுவதாக தெரியவில்லை. குறிப்பாக தாயகத்தில் உள்ள பலமான கட்சியாகிய தமிழரசுக் கட்சியின் மேலிடத்தில் காணப்படும் சம்பந்தரும் சுமந்திரனும் இந்த விடயத்தில் இந்தியாவில் முழுமையாகத் தங்கியிருக்கத் தயாரில்லை. 2021இல் இந்தியா கூட்டமைப்பை டில்லிக்கு வருமாறு அழைத்தபோது சம்பந்தர் அந்த அழைப்பை ஏதோ காரணங்களைக் கூறி ஏற்றுக்கொள்ளவில்லை.

எனினும் தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தலைமைத்துவப் போட்டி காரணமாக சிறீதரனும் சுமந்திரனும் யார் இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்வது என்ற ஒரு போட்டியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. அண்மை மாதங்களில் இருவருமே தமிழகத்துக்கு சென்றார்கள். இருவருமே அங்குள்ள பாரதிய ஜனதாக் கட்சிப் பிரமுகராகிய அண்ணாமலையோடு தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவது என்றால் இந்தியாவின் ஆசீர்வாதங்கள் தேவை என்று அவர்கள் கருதுகிறார்களோ தெரியவில்லை.

ஆனால் இது கட்சிக்குள் ஏற்பட்ட தலைமைத்துவ போட்டி மற்றும் தனியாள் முனைப்பு போன்றவற்றின் விளைவுதான். மாறாக, தமிழர்களை ஒரு தேசமாகக் கருதி இந்திய தேசத்தோடு ராஜதந்திர உறவுகளை எவ்வாறு பேண வேண்டும் என்ற தீர்க்கதரிசனம் மிக்க விஞ்ஞானபூர்வமான ஒரு வெளியுறவுத் தரிசனத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளாகத் தெரியவில்லை. அவ்வாறான வெளியுறவுத் தரிசனங்கள் தேவை என்று தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எந்தக் கட்சியும் சிந்திப்பதாகவும் தெரியவில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்குத் தான் எதிரில்லை என்று அடிக்கடி கூறி வருகிறது. அதே சமயம் 13 வது திருத்தத்தை இந்தியா தமிழ் மக்கள் மீது திணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெளிவாகப் பிரித்து கூறுகிறது. ஆனால் நடைமுறையில் அக்கட்சியின் செயற்பாடுகள் இந்தியாவை எதிரியாகப் பார்பதாகவே தெரிகிறது. தனது அரசியல் எதிரிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்று கூறும் போது மறைமுகமாக இந்தியா எதிரியாகிறது. அக்கட்சியின் லண்டன் ஆதரவாளர்கள் முகநூலில் எழுதும் குறிப்புகள் இந்தியாவை புத்திசாலித்தனமாக அணுக வேண்டும் என்ற வெளியுறவுத் தரிசனத்தைக் கொண்டவைககளாகத் தெரியவில்லை. அவ்வாறு இந்தியாவை நீக்கிவிட்டு மேற்கு நாடுகள் கையாண்டு தமது அரசியல் நலன்களை எப்படி பெறலாம் என்பது தொடர்பாக அவர்கள் இதுவரையிலும் விஞ்ஞானபூர்வமான வெளியுறவுக் கொள்கை எதனையும் முன் வைத்ததாகவும் தெரியவில்லை. பூகோள, புவிசார் அரசியலைப் பற்றி அதிகம் பேசும் ஒரு கட்சி அதன் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதி தான் உள்நாட்டுக் கொள்கையும் என்பதனை இதுவரை தெளிவாக நிரூபித்திருக்கவில்லை.

அக்கட்சி மட்டுமல்ல, உள்ளதில் பெரிய தமிழரசுக் கட்சியிடமும் வெளியுறவுக் கொள்கை என்று ஏதும் உண்டா?. இந்தியாவுக்கு கடிதம் எழுதிய ஏழு கட்சிகளிடமும் அப்படி எதுவும் உண்டா? இவ்வாறு தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற, தமிழ் மக்கள் மத்தியில் செயல்படுகின்ற கட்சிகள் தமது வெளியுறவுக் கொள்கையை, வெளியுறவு நடைமுறையை வெளிப்படையாக முன்வைக்காத ஒரு வெற்றிடத்தில், மேற்படி கட்சிகளிடம் வெளியுறவுக் கட்டமைப்பு எதுவும் இல்லாத வெற்றிடத்தில், தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும், தமிழகத்தில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஒரு பகுதியினர் பாரதிய ஜனதாவை இந்துத்துவா ராஜதந்திரத்தின் மூலம் நெருங்கி செல்லலாம் என்று நம்புவதாக தெரிகிறது.

ஆனால் இந்தியாவில் கடந்த 8 ஆண்டு கால பாரதிய ஜனதாவின் ஆட்சியைத் தொகுத்து பார்த்தால் அக்கட்சியும் 13 வது திருத்தத்தை தாண்டிச் செல்லத் தயாரில்லை. தமிழகத்தில் திராவிடக் கட்சிகளிடமிருந்து ஈழ விவகாரத்தை தன்வசப்படுத்த வேண்டும் என்று தமிழக பாரதிய ஜனதா தீவிரமாக உழைத்து வருகின்றது. இதுவிடயத்தில் திமுகவின் மீது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு உள்ள கோபத்தை அக்கட்சி பயன்படுத்த விளைகிறது. ஆனால் கடந்த எட்டு ஆண்டு கால அனுபவத்தின்படி இந்தியா ஈழத் தமிழர்களுக்கு வழங்கக்கூடிய தீர்வு 13-ஐத் தாண்டவில்லை.

எனவே இதுவிடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மக்கள் ஆணையைப் பெற்ற கட்சிகள் முதலில் தமது வெளியுறவுக் கொள்கையை பகிரங்க விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும். இதை இப்படி எழுதி எழுதியே எனக்குச் சலித்து விட்டது. முதலில் வெளியுறவுக் கொள்கை வேண்டும். பாரதிய ஜனதாவை அணுகத்தான் வேண்டும். ஏனென்றால் அது இந்திய மக்களின் ஆணையைப் பெற்ற கட்சி. இந்திய மத்திய அரசாங்கத்தில் யார் இருந்தாலும் அவர்களை அணுக வேண்டும். ஆனால் அதற்காக தமிழ்த் தேசியத்தை சைவத் தேசியமாகவோ இந்து தேசியமாகவோ குறுக்கத் தேவையில்லை. மாறாக தெளிவான வெளியுறவு இலக்குகளை முன்வைத்து இந்தியாவின் புவிசார் பாதுகாப்பு வியூகத்தில் ஈழத் தமிழர்கள் எப்படிப் பங்காளிகளாக மாறலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது அதுதான்.

# விரும்பியவர்கள் வரலாம் ஏனையோர் தவிர்க்கலாம்!

## தமிழ் எம்.பிக்களின் அரங்கம் குறித்து மனோ

கொழும்பு, ஏப். 13

" தமிழ் பாராளுமன்ற அரங்கம் மூலமாக தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பில் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று நான் கூற வில்லை. உண்மையில் அரசியல் தீர்வு தொடர்பில் நாடாளுமன்ற தமிழ் அரங்கம் பேசக்கூடாது என்றே நான் கூறியுள்ளேன்."

-இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈழத்தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் என தமிழ் பேசும் மக்களின் தேசிய அரசியல் அபிலாஷைகள் களத்திற்கு களம் மாறுபடுகின்றன.

ஆகவே அவற்றை அவ்வந்த மக்களின் ஆணைகளை பெற்ற கட்சிகள் தேசிய, சர்வதேசிய அரங்கங்களில் பேசட்டும்.

இங்கே, நாடெங்கும், வடக்கு, கிழக்கு, கொழும்பு உட்பட மேல், மத்திய, சப்ரகமுவ, ஊவா, தெற்கு மகாணங்களில் வாழும் தமிழர் எதிர்கொள்ளும் சமகால பொது நெருக்கடிகள் தொடர்பில், 1)சிங்கள அரசியல் கட்சிகள், 2)சிங்கள சமூக கலாச்சார மத நிறுவனங்கள் மற்றும் 3)சர்வதேச சமூகம் ஆகியவற்றுடன் இந்த அரங்கம் பேச வேண்டும் என்றே கூறியுள்ளேன்." - எனவும் மனோ குறிப்பிட்டார்.சமகால பொது நெருக்கடிகள் தொடர்பில், 1)சிங்கள அரசியல் கட்சிகள், 2)சிங்கள சமூக கலாச்சார மத நிறுவனங்கள் மற்றும் 3)சர் சமூகம் ஆகியவற்றுடன் இந்த அரங்கம் பேச வேண்டும் என்றே கூறியுள்ளேன்." - எனவும் மனோ குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக இப்போது ஒரு சில கட்சிகள் பிறகு ஏனைய தமிழ் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் என அனைவரையும் இணக்கப்பாட்டுடன் அரவணைக்கவே விரும்புகிறேன்.

முற்போக்கான சிங்கள எம்பிக்களை, அரங்கத்திற்கு "பார்வையாளர்" களாக கூட அழைக்கலாம் என கூறியுள்ளேன்.

இவை அனைத்தும் எனது கருத்துக்கள்தான். இவை அனைவராலும் ஏற்கப்பட வேண்டும்.

அதேவேளை, ஏற்கனவே கொழும்பில் உள்ள தூதுவர்கள் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு, இம்முயற்சியின் தொடர்பில் தமது அக்கறைய தெரிவித்துள்ளார்கள்.

"பிரிபடாத இலங்கைக்குள், அதிகாரங்களையும், வளங் களையும் பிரித்துக்கொண்டு, இலங்கை இறைமையின் பங்காளர்களாக வாழும் முயற்சி" என கட்சிகளுக்கான எனது அழைப்பில் தெளிவாக கூறியுள்ளேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் "பிரிவினைக்கு எதிரான சத்திய பிரமாணம்" செய்து விட்டே பதவி ஏற்றுள்ளார்கள்.

இதில் சிக்கல் உள்ளோர் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களாகவே முடியாது.

எனினும் நான் எந்த கட்சியையும், எம்பியையும். வலியுறுத்தி அழைக்க வில்லை. விரும்பியோர் வரலாம். ஏனையோர் தவிர்க்கலாம். எல்லோரும் என் நண்பர்களே.

"மாற்றுவழி" உள்ளோர் அவற்றை தாராளமாக நாடலாம். தாராளமாக போராடலாம். யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆட்சேபிக்க வில்லை.

நமது நாடு, வீடு, நிலம், மொழி, மதம், கலை, கலாச்சாரம், உயிர், பொருளாதாரம், உடைமை, உரிமை என எல்லாமே நாளுக்கு நாள் வேகமாக பறிபோனபடி இருக்கின்றன.

ஆகவே, எவராயினும், எதுவாயினும் செய்வதை விரைவாக செய்ய வேண்டும். ஊடக அறிக்கைகளுக்கு அப்பால் சென்று செயலாற்ற வேண்டும் என கேட்டு கொள்கிறேன்." எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

(அ)

# புத்தாண்டு காலப்பகுதியில் கைதிகளை சந்திக்க வாய்ப்பு!

கொழும்பு, ஏப். 13

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாளை முதல் எதிர்வரும் 3 தினங்களுக்கு கைதிகளை, உறவினர்கள் சந்திப்பதற்கான வாய்ப்புகளை வழங்க சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, கைதிகளை சந்திக்க பிரவேசிக்கும் உறவினர்கள், ஒருவருக்கு போது மான உணவு பொதி மற்றும் இனிப்புப் பண்டங்களை கொண்டு வர முடியும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதுதவிர, சகல சிறைச்சாலைகளிலும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பொதுமக்களின் பாதுகாப்புக்காக புலனாய்வு பிரிவினர் கடமையில்




கொழும்பு, ஏப். 13

பண்டிகைக் காலத்தில், பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, காவல் துறைக்கு மேலதிகமாக, புலனாய்வு பிரிவு அதிகாரிகளும், பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு சந்தைக்கு போலியான வர்த்தகர்கள் நுழைவதாக கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

பாவனைக்கு உதவாத மற்றும் காலாவதியான பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்துடன், போலி நாணயத்தாள்களும் புழக்கத்தில் விடப்படுகின்றன. அதுகுறித்து அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும்.


அதேநேரம், திட்டமிட்டவாறு திருட்டுச் சம்பவங்களின் ஈடுபடும் குழுவினரின் நடமாட்டம் உள்ளதால், பொதுமக்கள் பெறுமதியான ஆபரணங்களை அணிந்துசெல்ல வேண்டாம் என்பதுடன் பணப்பையை கவனமாக வைத்திருக்க வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

(அ)






# இலங்கை மின்சார சபை முன்பாக கல்முனையில் நேற்று போராட்டம்!





**கல்முனை, ஏப். 13**

**லங்கா சூரிய சக்தி சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று புதன்கிழமை இலங்கை மின்சார சபையின் கல்முனை பணிமனை முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

சோலர் மின் உற்பத்தியாளர்களின் கொடுப்பனவுகளின் நீண்ட கால நிலுவை, புதிய கொள்வனவு விலை மாற்றம் மற்றும் ஏனைய பிரச்னைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தும் நாட்டில் அதிகமாக சூரியசக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலைபேறான சக்தி உருவாக்க அபிவிருத்தி திட்டத்தில் பங்குதாரர்களாக உள்ள அவர்கள் தற்காலத்தில் எதிர்நோக்கும் பிரச்னைகளை கவனத்தில் கொள்ளுமாறும் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

குறிப்பாக, கல்முனை பிராந்தியத்தில் மாத்திரம் சுமார் 13 மெகா வாட்ஸூக்கும் அதிகமாக இலங்கை மின்சார சபைக்கு இந்த சங்க உறுப்பினர்கள் ஊடாக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. இதே போல் ஒவ்வொரு மாதமும் இலங்கை மின்சார சபையிடமிருந்து 4 கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்க வேண்டிய தேவையும் உள்ளது . மேலும், முழு கிழக்கு மாகாணத்துக்கும் ஒவ்வொரு மாதமும் 7 கோடி ரூபாய்க்கும் மேல் இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டியிருக்கின்றது .

தற்போது இலங்கை மின்சார சபை தமது கட்டணத்தை உச்சமாக சீரமைத்துள்ள இந்த தருணத்தில் சேவை வழங்குநர்களாகிய இவர்களது பிரச்னைகளையும் நாட்டில் காணப்படுகின்ற அதிகரித்த பணவீக்கம் மற்றும் பொருட்செலவுகள் , பராமரிப்பு செலவுகளையும் கருத்தில் கொண்டு பல்வேறு கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்தனர்.

ஒன்பது மாதங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள சோலர் மின் உற்பத்தி கொடுப்பனவை மேலும் தாமதம் இன்றி மின்சார சபை முன்னுரிமைப்படுத்தி வழங்குதல், தற்போதுள்ள அதிகரித்த பணவீக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள் காரணமாக இருக்கின்ற மிகப்பெரிய விலையேற்றத்துக்கு சமாந்தரமாக தற்போது வழங்கப்படும் 22 ரூபாய் கொடுப்பனவை புதிய விலையேற்றத்துக்கு ஏற்றால்போல் திருத்தம் செய்தல், இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்து பொருத்தமான திருத்தங்களை கொண்டு வருதல், முறைப்படுத்தப்பட்ட கால அட்டவணைக்கு அமைவாக தொடராக கொடுப்பனவை வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி சோலர் மின் உற்பத்தியாளர்களின் பிரச்னைகள் தொடர்பாக உரிய தரப்புகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டி ஆர்பாட்டத்தின் பின்னர் இலங்கை மின்சார சபை பிராந்திய பிரதம பொறியலாளர் ஏ.எம். ஹைக்கலிடம் மனுவையும் கையளித்தனர். (ஐ-01)

# தனியார் கல்வி நிலையங்களை தற்காலிமாகப் பூட்ட அறிவிப்பு!

## கல்முனை மாநகர சபை அறிவிப்பு

*கல்முனை, ஏப். 13*

கல்முனை மாநகர எல்லைக்கு உட்பட்ட அனைத்து தனியார் கல்வி நடவடிக்கைளையும் தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ. எல். எம். அஸ்மி அறிவித்துள்ளார்.

இதற்கமைய, கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம் 01 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் அவர் அறிவித்துள்ளார்.

இஸ்லாமியர்களின் புனித நோன்பு மற்றும் தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளை கொண்டாட வசதியாகவே கல்வி நிலையங்களுக்கு தற்காலிகமாக பூட்டுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-01)

# கர்ப்பவதிகளின் போஷாக்கை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பம்!



*கல்முனை, ஏப். 13*

கல்முனையில் கர்ப்பவதி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போஷாக்கு மட்டத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம். எஸ். எம். சப்றாஸின் பணிப்புரைக்கமைய கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலியின் வழிகாட்டலில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் ஏ. எல். எம். நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கர்ப்பவதித் தாய்மாருக்கு குடும்ப நல உத்தியோகத்தர்களால் போஷாக்கு பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதன்போது 264 கர்ப்பவதி தாய்மார்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 2 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் கொடுப்பானவும் வழங்கப்பட்டது. (ஐ-01)

# மட்டக்களப்பில் பெண்களுக்கு இலவச சட்ட ஆலோசனை முகாம்!

*மட்டக்களப்பு, ஏப். 13*

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் பெண்களுக்கான இலவச சட்ட ஆலோசனை முகாம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் மூத்த சட்டத்தரணியுமான திருமதி. மயூரி ஜனன் தலைமையில் மட்டக்களப்பு தன்னாமுனை மியாணி மண்டபத்தில் இந்த இலவச சட்ட ஆலோசனை முகாம் இடம்பெற்றுள்ளது.

இந்த இலவச சட்ட ஆலோசனை முகாமில் சட்டத்தரணிகளான சின்னத்துரை ஜெகன், பேரின்பராஜா துஸ்யந்தி, ரவிராஜ் ரமனா, நஜுமுதீன் சித்தி நஜீபா உள்ளிட்டோர் கலந்துகொண்டு சட்ட ஆலோசனை வழங்கியிருந்தனர்.

இச் சட்ட ஆலோசனை முகாமில் 400 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். இதில் 150 இற்கு மேற்பட்ட பெண்களுக்கு இலவச வழக்குத்தாக்கல் செய்வதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன

இந்த முகாமில் முஸ்லிம் பெண்களின் விவகாரங்கள், இணையவழி குற்றங்கள், பிறப்பு, இறப்பு பதிவுகள் தொடர்பாகவும், விவாகம் மற்றும் விவாகரத்து, இல்லத்து வன்முறை, காணிப் பிணக்குகள், சிறுவர் பிரச்னைகள், பாலியல் துஷ்பிரயோகம், பராமரிப்பு மற்றும் உளவள ஆற்றுப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான சட்ட ஆலோசனைகள் இதன்போது வழங்கப்பட்டதுடன், பெண்களின் பிரச்னைகள் தொடர்பாக தனித்தனியாக ஆராயப்பட்டு அவர்களுக்குரிய சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# காணாமல் போன சிறுமி மீட்பு; காதலரான யாழ். இளைஞர் கைது!

*மட்டக்களப்பு, ஏப். 13*

காத்தான்குடியில் காணாமல் போன 15 வயது மாணவி நேற்று முன்தினம் மீட்கப்பட்டார். அவரை அழைத்துச் சென்ற அவரின் காதலர் என்று கூறப்படும் இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்றும் காத்தான்குடியில் கைத்தொழில் நிலையம் ஒன்றை நடத்திவருகின்றார் என்றும் தெரிய வருகின்றது.

வீட்டிலிருந்த மாணவி கடந்த திங்கட்கிழமை காணாமல் போயிருந்தார் என்று அவரின் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில் குறித்த இளைஞருடன் தங்கியிருந்த சிறுமி மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட மாணவி மருத்துவ பரிசோதனைக்காக மட்டக்களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

# ஏறாவூர் வாவிக்கரை தூய்மையாக்கப்பட்டது!

*மட்டக்களப்பு, ஏப். 13*

நகர தூய்மையாக்கல் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் ஏறாவூர் வாவிக் கரை நேற்று சுத்தம் செய்யப்பட்டது.

சுற்றாடல் அமைச்சின் வழிகாட்டலில் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்கள் இந்தப் பணியை முன்னெடுத்தன.

ஏறாவூர் வாவிக்கரையிலுள்ள சிறுவர் பூங்காக்களை அண்மித்த பகுதிகள் மற்றும் வடிகான்கள் இந்தத் திட்டத்தின் கீழ் துப்பரவு செய்யப்பட்டன. மேலும், ஏறாவூர் வாவியோரம் அமைந்துள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தையும் அமைச்சர் நஸீர் அகமட் பார்வையிட்டார். (ஐ)



# மூதூர் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பு ஆரம்ப விழா!

*திருகோணமலை, ஏப். 13*

மூதூர் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பின் அங்குரார்ப்பணமும் இப்தார் நிகழ்வும் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்றது.

இதன்போது முஸ்லிம் வலையமைப்பின் பெண்களுக்கு அகம் மனிதாபிமான வலயமைப்பால் உலருணவு பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மூதூர் பிரதேச செயலாளர் எம். பீ. எம். முபாரஹ், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், அகம் மனிதாபிமான வலயமைப்பின் இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், மதகுருமார்கள், பெண்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

# உக்ரைன் சிப்பாயின் தலை துண்டிக்கப்படும் வீடியோ!

## ஜெலன்ஸ்கி கண்டனம்!



கீவ், ஏப். 13

உக்ரைனிய இராணுவ வீரர் ஒருவரின் தலை துண்டிக்கப்படும் வீடியோ சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. ரஷ்ய படையினரே தலையை துண்டித்த தரப்பினர் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி குற்றம்சுமத்தியுள்ளார்.

ஒவ்வொரு சர்வதேசத் தலைவரும் "நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறினார்.

"இது ரஷ்யாவின் வீடியோ, ரஷ்யாவின் புதிய விதிமுறை, வாழ்க்கையை அழிக்கும் பழக்கம். இது ஒரு (தனிமைப்படுத்தப்பட்ட) விபத்து அல்லது அத்தியாயம் அல்ல. இது முன்பு நடந்தது. இது புச்சாவில் நடந்தது. ஆயிரம் முறை" என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

"எல்லோரும் எதிர்வினையாற்றவேண்டும். ஒவ்வொரு தலைவரும். காலம் கடந்தும் அதை மறந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். நாங்கள் எதையும் மறக்கப்போவதில்லை, கொலையாளிகளை மன்னிக்கப் போவதில்லை. எல்லாவற்றிற்கும் சட்டப்பூர்வமான பொறுப்பு இருக்கும். வெற்றி பெறுவதே முக்கிய குறிக்கோள். ஆக்கிரமிப்பாளர்களின் தோல்வி, கொலைகாரர்களுக்கு தண்டனை, தீய அரசுக்கு ஒரு நீதிமன்றம்." என அவர் தெரிவித்தார்.

ஏப்ரல் 11 ஆம் திகதி பிற்பகுதியில், ஒரு வீடியோ சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது, அதில் ஒரு ரஷ்ய போர்வீரர் ஒரு உக்ரைனிய சிப்பாயின் தலையை கத்தியால் வெட்டுவது போல் தோன்றியது.

வீடியோவின் தொடக்கத்தில் கேட்கப்பட்ட ஒரு குரல், மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும்போது பாதிக்கப்பட்டவர் உயிருடன் இருந்திருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

உக்ரைனின் பாதுகாப்பு சேவை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் உத்தியோகபூர்வ விசாரணையைத் தொடங்கியதாகக் கூறியது.


"நாங்கள் இந்த அரக்கர்களைக் கண்டுபிடிப்போம். தேவைப்பட்டால், அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை பெறுவோம்: பூமிக்கு அடியில் இருந்தோ அல்லது வேறொரு உலகத்திலிருந்து. ஆனால் அவர்கள் செய்ததற்காக அவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்கள்" என்று உக்ரைனின் பாதுகாப்பு சேவை தலைவர் கூறினார்.

நிலத்தில் தெரியும் பசுமையாக இருக்கும் அளவை வைத்துப் பார்த்தால், வீடியோ கோடையில் படமாக்கப்பட்டதாக தெரிகிறது.

சி.என்.என் கூற்றுப்படி, இரண்டு உக்ரைனியப் படைவீரர்கள் தலை துண்டிக்கப்பட்டதாகக் கூறப்படும் மற்றொரு வீடியோ ஏப்ரல் 8 அன்று ஒன்லைனில் பகிரப்பட்டது. இது ரஷ்ய சார்பு சமூக ஊடக சனலில் வெளியிடப்பட்டது. வாக்னர் குழுமத்தைச் சேர்ந்தவர்களால் இது படமாக்கப்பட்டது. (அ)

# அமெரிக்காவை பின்பற்றுவதிலிருந்து ஐரோப்பா முற்றாக விடுபடவேண்டும்!

## பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன்



பீஜிங், ஏப். 13

பிரான்ஸின் அதிபர் இம்மானுவல் மக்ரோன் சீனாவில் மேற்கொண்ட மூன்று நாள் விஜயத்தின் முடிவில் வெளியிட்டிருக்கின்ற கருத்துக்கள் மேற்குலக ராஜதந்திர வட்டாரங்களில் பெரும் சலசலப்பை உருவாக்கி உள்ளன.

தாய்வான் நெருக்கடியில் ஐரோப்பா அமெரிக்காவையோ சீனாவையோ பின்தொடரக் கூடாது என்று அவர் எச்சரித்திருக்கிறார்.

ஐரோப்பா அதன் சுயாதிபத்தியத்தை - இறைமையைப்பேணுவதன் ஊடாக உலக ஒழுங்கில் மூன்றாவது பெரும் சக்தியாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளியிட்டிருக்கின்ற அவர், அமெரிக்காவில் பெரிதும் தங்கியிருப்பதை ஐரோப்பா குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற சாரப்படக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஐரோப்பா தனக்குச் சொந்தமில்லாத - தன்னுடையதல்லாத - வெளி நெருக்கடிகளில் சிக்குகின்ற ஆபத்தை எதிர்கொள்கின்றது . அது பாதுகாப்பு விடயங்களில் அமெரிக்கா மீது தங்கியிருப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவைப் பின்பற்றிச் செல்லுமாறு தன் மீது திணிக்கப்படும் அழுத்தங்களை எதிர்ப்பதற்கு ஐரோப்பா முன்வர வேண்டும். தாய்வான் விவகாரத்தில் அமெரிக்கா - சீன இடையிலான மோதலில் சிக்குவது ஐரோப்பாவுக்கு ஒரு பொறியாகவே இருக்கும். அந்த நெருக்கடியில் இரண்டு தரப்புகளில் இருந்தும் விலகி - பக்கம் சாராத கொள்கையையே ஐரோப்பா பின்பற்ற வேண்டும்.

-இவ்வாறு சீன விஜயத்தின் முடிவில் விமானத்தில் வைத்து வழங்கிய ஒரு முக்கிய செவ்வியில் மக்ரோன் கருத்து வெளியிட்டிருக்கிறார். அவரது இந்தக் கருத்துக்கள் மேற்குலகக் கூட்டணிக்குள் குறிப்பாக வோஷிங்டனில் பெரும் கவனத்தை ஈர்த்திருக்கிறது. நேட்டோ கூட்டணி "மூளைச் சாவு" அடைந்து விட்டது என்று மக்ரோன் முன்னர் ஒரு தடவை கூறியிருந்ததை ஒத்த பாரதூரமான கருத்துக்கள் இவை என்று அவதானிகள் கூறுகின்றனர்.

பிரான்ஸின் பொருளியல் தினசரியான "லேஸ் எக்கோ" மற்றும் "பொலிரிக்கோ" ஆகிய பத்திரிகைகளது செய்தியாளர்களுக்கு

அளித்த பேட்டியில், ஐரோப்பாவின் மூலோபாய சுயாதிபத்தியம் குறித்து மக்ரோன் ஆணித்தரமான கருத்துக்களை வெளியிட்டார். எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு, சமூக வலைத் தளங்கள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி, "முக்கிய விவகாரங்களில் நாங்கள் அடுத்தவரிடம் தங்கியிருப்பதை விரும்பவில்லை" என்றும் மக்ரோன் குறிப்பிட்டார்.

தாய்வான் விவகாரத்தில் அமெரிக்கா - சீனா இடையே புதிதாக முறுகல் நிலை தோன்றியுள்ளது. தாய்வானின் அதிபர் மத்திய அமெரிக்க நாடுகளில் பத்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருப்பதையும் கலிபோர்னியாவில் தங்கிச் செல்லும் வழியில் அவர் அமெரிக்க சபாநாயகர் ஒருவரைச் சந்திப்பதையும் கடுமையாக ஆட்சேபித்துள்ள பெய்ஜிங், அதற்கு எதிர்வினையாற்றும் விதமாகத் தைவானைச் சூழவுள்ள கடற்பிரதேசத்தில் புதிதாகப் பெரும் போர்ப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது.

அதனால் தாய்வான் நீரிணையில் பதற்ற நிலைமை தோன்றியுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே தாய்வான் நெருக்கடி தொடர்பான ஐரோப்பிய நிலைப்பாட்டை அதிபர் மக்ரோன் வெளியிட்டிருக்கிறார். மக்ரோனின் இந்தக் கருத்துக்களுக்கு மத்தியிலும் , பாரிஸுடனான உறவு மீது வெள்ளை மாளிகை தனது "நம்பிக்கையை " வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (அ)

# சீனாவில் பறவை காய்ச்சலால் முதல் உயிரிழப்பு பதிவாகியது!

பீஜிங், ஏப். 13

சீனாவில் பறவைக் காய்ச்சலுக்கு (H3N8) முதல் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

குவாங்டாங் மாகாணத்தில் 58 வயது பெண்ணுக்கு பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

கடுமையான நிமோனியாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிர சிகச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், அப்பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த பெண் நோய் பாதிப்பிற்கு உள்ளாவதற்கு முன்பு ஒரு கோழிபண்ணைக்கு சென்றதாகவும் அங்கு சேகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாதிரிகளில் பறவைக் காய்ச்சலுக்கு சாதகமான வைரஸ்கள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இது சீனாவில் பறவைக் காய்ச்சலால் ஏற்பட்ட முதல் உயிரிழப்பாகும்.

H3N8 வைரஸ் மனிதர்களுக்கும் பரவுவது கடந்த ஒன்றரை ஆண்டுக்கு முன்பு உறுதிப்படுத்தப்பட்டது. 2022ஆம் ஆண்டு மத்திய சீனாவில் 4 வயது சிறுவனுக்கு பறவைக் காய்ச்சல் தொற்று ஏற்பட்டது. அதில் இருந்து குணமடைந்தான். பின் அதே ஆண்டு மே மாதம் ஹெனான் மாகாணத்தை சேர்ந்த 5 வயது சிறுவன் பாதிக்கப்பட்டபோது, அச்சிறுவனுக்கு இலேசான அறிகுறிகள்



மட்டுமே இருந்தன. இதற்கிடையேதான், பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மூன்றாவது நபர் உயிரிழந்துள் ளார்.

இதையடுத்து, சீனாவில் பறவைக் காய்ச்சல் பரவலைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சீனாவில் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதியில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இன்று வரை பல நாடுகளில் கொரோனா பாதிப்பு இருந்து வருகிறது. கொரோனாவால் உலகம் முழுதும் இலட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். (அ)



# ரஷ்யாவின் ஷிவேலு எரிமலை வெடித்தது

## விமான போக்குவரத்திற்கு தடை

மொஸ்கோ, ஏப். 13

ரஷ்யாவின் கம்சாட்கா தீபகற்பத்தில் உள்ள ஷிவேலுச் எரிமலை வெடித்து சிதற ஆரம்பித்துள்ளது.

சுமார் 10 கிலோ மீற்றர் உயரத்திற்கு அதன் சாம்பல் எழும்பி இருக்கிறது.

மேலும், 15 கிலோ மீற்றர் உயரத்திற்கு சாம்பல் வெடிப்புகள் எந்த நேரத்திலும் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிமலை வெடிப்பு காரணமாக விமான போக்குவரத்திற்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிமலையை சுற்றியுள்ள பல கிராமங்களில் வீடுகளிலும் வாகனங்களிலும் சாம்பல் படர்ந்துள்ளது. 60 ஆண்டுகளில் இல்லாத அளவில் சாம்பல் படர்ந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பாடசாலைகளை மூடுமாறு உத்தரவிட்டுள்ள அதிகாரிகள், மக்களை வீட்டுக்குள்ளேயே இருக்குமாறும் அறிவுறுத்தி உள்ளனர். (அ)



### உலகக் கிண்ணத் தொடர்:

## சென்னையில் விளையாட பாகிஸ்தான் விருப்பம்!

சென்னை, ஏப். 13

இந்த வருட உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் அணி தனது போட்டிகளை சென்னை மற்றும் கொல்கத்தாவில் விளையாடுவதற்கு விரும்பும் என இந்தியாவின் பி. ரி. ஐ. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பாகிஸ்தான் அணி இந்த இரு நகரங்களில் விளையாடியபோது பாதுகாப்பாக உணர்ந்ததாக கூறப்படுகிறது. ஆண்களுக்கான ஒருநாள் உலகக் கிண்ண சுற்றுப்போட்டி இந்தியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அஹமதாபாத், லக்னோ, மும்பை, சென்னை, கொல்கத்தா, ராஜ்கொட், பெங்களூார், டில்லி, இந்தூர், குவாஹெட்டி, ஐதராபாத், தர்மசாலா ஆகிய 12 நகரங்களில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பிரமுகர்களுக்கும் ஐ. சி. சி. பிரமுகர்களுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

“இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் இந்திய அரசாங்கத்தின் தீர்மானத்திலேயே அதிகமானவை தங்கியுள்ளன. ஆனால், பாகிஸ்தான் அணி தனது பெரும்பலான போட்டிகளை கொல்கத்தா, சென்னையில் விளையாட வாய்ப்புள்ளது” என ஐசிசியுடன் தொடர்புடைய வட்டாரமொன்று தெரிவித்ததாக பி. ரி. ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

“2016 ஆம் ஆண்டு இருபது20 உலகக்கிண்ணத் தொடரில் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்தியாவுடனான போட்டியில் பாகிஸ்தான் பங்குபற்றியது. அப்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் வீரர்கள் மகிழ்ச்சியடைந்தனர். சென்னை எப்போதும் பாகிஸ்தான் அணிக்கு விசேடமானதாக உள்ளது” என அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது. (ஐ)



## டெஸ்ட் சம்பியன்ஷிப் அணியில் ரஹானேயின் பெயர் பரிசீலனை

புதுடில்லி, ஏப். 13

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டிக்கான இந்திய அணிக்கு ரஹானேயின் பெயர் பரிசீலிக்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டி, வரும் ஜூன் 7 ஆம் திகதி இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் தொடங்கவுள்ளது.

இதனையொட்டி இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் ட்ராவிட்டும் அணியின் பிற பயிற்சியாளர்களும், வி. வி. எஸ். லட்சுமண் தலைமையிலான தேசிய கிரிக்கெட் அக்கடமி குழுவினரை சந்தித்து, இந்திய டெஸ்ட் அணி குறித்து விவாதிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் ரிஷப் பந்த் , ஸ்ரேயாஸ் ஐயர் ஆகியோர் காயத்தால் அவதிப்பட்டு வருவதால், ரஹானேவின் பெயர், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டிக்கான இந்திய அணிக்கு பரிசீலிக்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

மும்பை அணிக்கு எதிரான ஐபிஎல் போட்டியில் ரஹானே 19 பந்துகளில் அரைச்சதம் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பரபரப்பான போட்டியில் மும்பைக்கு முதல் வெற்றி!

புதுடில்லி, ஏப். 13

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 16ஆவது லீக் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது மும்பை இந்தியன்ஸ் அணி.

173 ஓட்டங்கள் இலக்கை துரத்திய அந்த அணிக்கு வழக்கம் போல் ரோகித் மற்றும் இஷான் கிஷன் தொடக்கம் கொடுத்தனர். கடந்த இரண்டு போட்டிகளாக எடுபடாத இந்தக் கூட்டணி, இம்முறை அதிரடியாக இன்னிங்ஸை தொடக்கியது. அதிலும் முதல் 3 ஓவர்களில் இருவரும் ஒற்றை ஓட்டம் எதுவும் எடுக்காமல் பௌண்ட்ரி, சிக்ஸர்கள் மூலமாக மட்டுமே ஓட்டங்களை சேகரித்தனர்.

71 ஓட்டங்கள் சேர்த்த இந்தக் கூட்டணி 8ஆவது ஓவரில் பிரிந்தது. வீண் முயற்சியாக ரோகித் செய்த தவற்றால் இஷான் கிஷன் ரன் அவுட் ஆனார். அவர் 31 ஓட்டங்கள் எடுத்தார். இதன்பின் திலக் வர்மா களமிறங்கினார். இவரும் ரோகித்தும் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இருவரும் 68 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். முகேஷ் குமார் ஓவரில் அடுத்தடுத்து பௌண்ட்ரி, சிக்ஸர்களை விளாசிய திலக் வர்மா, அதே வேகத்தில் ஆட்டமிழந்தார். அவர் 41 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அதற்கடுத்த பந்தில் வந்த வேகத்தில் சூர்யகுமார் யாதவ் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

தொடக்க வீரராக இறங்கி அரைச்சதம் கடந்திருந்த ரோகித் சர்மா 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முஸ்தபிஹூர் ரஹ்மான் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். ஐபிஎல் வரலாற்றில் ரோகித் சர்மாவுக்கு இது 41வது அரைச்சதம்.



இதன்பின், ரிம் டேவிட் மற்றும் கிறீன் இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர். கடைசி பந்தில் வெற்றிக்கு இரண்டு ஓட்டங்கள் என்ற நெருக்கடியான நிலையில் டேவிட் இரண்டுகள் ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிபெற வைத்தார். இதன்மூலம் 6 விக்கெட் வித்தியாசத்தில் முதல் வெற்றியை பதிவு செய்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

டில்லி கப்பபிட்டல்ஸ் தரப்பில் அதிகபட்சமாக முகேஷ் குமார் 2 விக்கெட் வீழ்த்தினார்.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. டேவிட் வோர்ணருடன் பிரிதிவி ஷா தொடக்கம் கொடுத்தார். கடந்த போட்டியில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்த பிரிதிவி இம்முறை 15 ஓட்டங்களுக்கு நடையைக் கட்டினார். மனிஷ் பாண்டேவும் கிடைத்த வாய்ப்பில் பெரிதாக சோபிக்கவில்லை. 26 ஓட்டங்கள் எடுத்திருந்த அவர், சாவ்லா பந்து வீச்சில் பிடியெடுப்பு ஆனார்.

யஷ் துல் 2 ஓட்டங்கள் ரோவ்மென் பவல் 4 ஓட்டங்கள், லலித் யாதவ் 2 ஓட்டங்கள் என நடுவரிசை வீரர்களும் கைகொடுக்க தவறினாலும், வோர்ணர் தனியாளாகப் போராடினார். இறுதி ஓவர்களில் அக்சர் பட்டேல் அவருக்கு பக்கபலமாக அமைந்தார்.

வோர்ணர் நிதானத்தை கடைபிடிக்க, அக்சர் ஆக்ரோஷம் காட்டினார். இதனால், டில்லி கப்பிட்டல்ஸ் ஓட்டங்கள் விரைவாக உயர்ந்தது. 22 பந்துகளில் அரைச்சதம் கடத்த அக்சர், அடுத்த இரண்டு பந்துகளில் 54 ஓட்டங்களுக்கு அரங்கம் திரும்பினார்.

இதற்கடுத்த இரண்டாவது பந்தே 51 ஓட்டங்கள் எடுத்திருந்த வோர்ணரும் விக்கெட்டை பறிகொடுத்தார். குல்தீப் யாதவ் வந்த வேகத்தில் ரன் அவுட் ஆனார். ஓவரின் கடைசி பந்தில் அபிஷேக் போரல் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, குறிப்பிட்ட 19ஆவது ஓவரில் மட்டும் 4 விக்கெட்களை இழந்தது டில்லி அணி.

இறுதியில் 2 பந்துகள் மீதமிருந்த நிலையில் 172 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது டில்லி.

மும்பை இந்தியன்ஸ் தரப்பில் பியூஸ் சாவ்லா மற்றும் ஜேசன் பெஹ்ரன்டோர்ப் தலா 3 விக்கெட்டும், ரிலே மெரிடித் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். (ஐ)

# மன்கட் ஆட்டமிழப்பு முயற்சி; அஸ்வின் மகிழ்ச்சி தெரிவிப்பு

பெங்களூர், ஏப். 13

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 15ஆவது லீக் போட்டியில் பெங்களூர் மற்றும் லக்னோ அணிகள் விளையாடின. இந்த போட்டியின் கடைசி பந்தில் பந்துவீச்சாளரின் பக்கம் இருந்த எதிரணி வீரரான ரவி பிஷ்னோயை ‘மன்கட்’ முறையில் ஆட்டமிழக்க செய்ய முயற்சி செய்திருப்பார் பெங்களூர் பந்துவீச்சாளர் ஹர்ஷல் படேல். அவரின் அந்த தைரியம் தனக்கு மகிழ்ச்சி கொடுப்பதாக அஸ்வின் தெரிவித்துள்ளார்.

லக்னோ அணியின் வெற்றிக்கு ஒரேயோர் ஓட்டம் மட்டுமே தேவைப்பட்ட ஆட்டத்தின் இக்கட்டான கட்டத்தில். அதுவும் கடைசிப் பந்தில் இதை ஹர்ஷல் செய்திருந்தார். இது ஒவ்வொரு பந்துவீச்சாளரும் அவசியம் செய்யவேண்டுமென அஸ்வின் ஊக்குவிக்கும் வகையில் கருத்து தெரிவித்துள்ளார்.

“வெற்றிக்கு ஓர் ஓட்டம் மட்டுமே தேவை. ஒரு பந்துதான் எஞ்சி உள்ளது. எப்படியும் ஓட்டம் எடுக்கவே முயற்சிப்பார். அந்த சூழலில் எப்போதுமே நான் துடுப்பாட்ட வீரரை ரன் அவுட் செய்யவே முயற்சிப்பேன். அதன் விளைவுகள் என்ன என்பது குறித்தெல்லாம் யோசிக்க மாட்டேன். நான் அந்தப் போட்டியை பார்த்த போது. அவர் துடுப்பாட்ட வீரர் ரன் அவுட் செய்ய வேண்டும் என என் மனைவியிடம் சொன்னேன். பவுலரும் அதை செய்தார். அவரின் அந்த தைரியத்தை கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இது போல மேலும் பல பந்துவீச்சாளர்கள் செய்ய வேண்டுமென விரும்புகிறேன். இது விதிகளுக்கு உட்பட்ட ஒன்றுதான்” என அஸ்வின் தெரிவித்துள்ளார். (ஐ)



# எல்லை நிர்ணய நடவடிக்கையால் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு!



## வரைவை தயாரித்தவரே கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 13

**எல்லை நிர்ணய நடவடிக்கைகளில் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்கும் போது சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கின்றோம். தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு எமக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளமையால் இதனைத் தவிர்க்க முடியாது என எல்லை நிர்ணயத்திற்கான தேசிய குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

எல்லை நிர்ணய குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளமை அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பிரஜைகளுக்கு தமது பரிந்துரைகளையும் யோசனைகளையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவின் ஆரம்ப வரைவு நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டது. இதன் பின்னர் மகிந்த தேசப்பிரிய நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவின் பதவிக் காலம் இந்த மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, எல்லை நிர்ணய பணிகளுக்காக எடுக்கப்பட்ட செயன்முறைகள், அரசியல் கட்சிகளினதும் சிவில் அமைப்புக்களினதும் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள், பொது மக்களின் கருத்துக்கள் தொடர்பான தகவல்கள், குழுவின் அவதானிப்புகள், பரிந்துரைகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கைகளும் மே 2ஆம் திகதி பிரதமரிடம் கையளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் ஆர்வம் செலுத்துகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள், பிரஜைகள் தமது முன்மொழிவுகளையும் கருத்துகளையும் எதிர்வரும் 25 அல்லது 26ஆம் திகதிக்கு முன்னர் எல்லை நிர்ணய தேசிய குழுவுக்கு அனுப்பி வைக்க முடியும்.

கொழும்பு -5, கிருல வீதி , நில அளவையாளர் அலுவலகக் கட்டடத்தில் எமது அலுவலகம் அமைந்துள்ளது. மீளாய்வுக்குழு மீண்டும் நியமிக்கப்பட்டால், எம்மிடம் கையளிக்கப்படும் பரிந்துரைகளை அதில் சமர்ப்பிக்க முடியும்.

கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதம் வரை இது குறித்து எவ்வித ஆர்வமும் செலுத்தப்படவில்லை. பின்னர் கட்சிகளை அழைத்து இது தொடர்பில் கலந்தாலோசித்த போதிலும், சாதகமான பதில்கள் எவையும் கிடைக்கப் பெறவில்லை.

மார்ச் 14ஆம் திகதி முதல் இது குறித்து அவதானம் செலுத்துமாறு நாம் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். எனினும், இது குறித்து சுமார் 15 பரிந்துரைகள் மாத்திரமே கிடைத்தன. தொகுதிகள் குறைக்கப்படும்போது சில சிறுபான்மை மக்கள் குழுக்களுக்கு பாதகம் ஏற்படும் என அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன. தொகுதிகள் குறைக்கப்படும் போது இவ்வாறு அநீதி இழைக்கப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். தொகுதிகளைக் குறைக்குமாறு கூறிய பின்னர் எம்மால் இதனைத் தவிர்க்க முடியாது - என்றார். (ஐ)

# இலங்கை நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றுபட்டு முயற்சிகளை எடுப்போம்!

## சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர்

நியூயோர்க், ஏப். 13

இலங்கையின் நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்காக ஒன்றுபட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜூவா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இந்த நெருக்கடியான தருணத்தில் சர்வதேச நாணய நிதியம் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையிலான குழுவுடனான சந்திப்பின் பின்னர் அவர் இதனை




தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோருடன் சிறந்த சந்திப்பு இடம்பெற்றது இலங்கைக்கு ஆதரவளிப்பதற்காகவே சர்வதேச நாணய நிதியம் இங்குள்ளது என ருவிற்றர் பக்கத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்

இலங்கை இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றுபட்டு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சுதந்திரக் கட்சியின் 11 பேர் அணி கட்சி மே தினத்தை புறக்கணிக்கும்!

கொழும்பு, ஏப். 13

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் 11பேர் இம்முறை சிறீ லங்கா சுதந்திர கட்சி மே தின கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளனர் என்று அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது சிறீ லங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி 14 உறுப்பினர்கள் தெரிவானார்கள். அந்த உறுப்பினர்களில் 11பேர் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து அமைச்சுப் பதவி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர்.

இந்நிலையில், சிறீ லங்கா சுதந்திர கட்சி இம்முறை ஏற்பாடு செய்திருக்கின்ற மே தின கூட்டம் அல்லது பேரணியில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு தங்கள் அணி தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# இறுதி நிலக்கரி கப்பல் மே 1இல் இலங்கை வரும்!

## நிலக்கரி நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 13

நுரைச்சோலை ‘லக்விஜய’ அனல் மின் நிலை யத்தின் மின் உற்பத்திக்கு தேவையான கடைசியும் 30ஆவதுமான நிலக்கரி கப்பல் எதிர்வரும் மே முதலாம் திகதி புத்தளத்தை வந்தடையும் என்று இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் உற்பத்தி முன்னறி விப்பின்படி, இந்த பருவத்துக்கான நிலக்கரி தேவை 30 கப்பல்கள் எனவும், 23 கப்பல்களிலிருந்து நிலக் கரி பெறப்பட்டுள்ளன.

மேலும், 24 ஆவது முதல் 26 ஆவது வரையான மூன்று கப்பல்கள் தற்போது புத்தளத்தை வந்தடைந் துள்ளன. 27 ஆவது தொடக்கம் 29ஆவது வரையான மூன்று கப்பல்கள் மே முதலாம் திகதிக்கு முன் னர் புத்தளத்தை வந்தடையவுள்ளன.

இந்நிலையிலேயே, இப்பருவக்காலத்துக்குத் தேவையான 30ஆவதும் கடைசியுமான கப்பல் எதிர்வரும் முதலாம் திகதி புத்தளத்தை வந்தடையும். இதன்படி, லக்விஜய அனல் மின் நிலையமா னது, இந்த பருவ காலத்தில் அதிகூடிய கொள்ள ளவில் இயங்குவதற்கு தேவையான நிலக்கரியை பெற்றுக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வரிக் கொள்கையை பயன்படுத்தி மாணவர்களை பழிவாங்காதீர்கள்

## பேராசிரியர்களை கேட்கிறது ஐ. தே. க.!

கொழும்பு, ஏப். 13

மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை ஆசிரியர் மற்றும் பல்கலைக்கழ பேராசிரியர்கள் ஆரம்பிக்க வேண்டும். வரிக் கொள்கையை பயன்படுத்தி மாணவர்களை பழிவாங்கக்கூடாது என ஐக்கிய தேசிய கட்சி செயற்குழு உறுப்பினர் சாந்தினி கோங்கஹகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழில்சங்க போராட்டத்தை கடந்த ஒருமாத காலமாக முன்னெடுத்து வருகின்றனர். வரிக்கொள்கை என்பது அனைவருக்கும் பொதுவானது. அது பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு மாத்திரமானதல்ல. இந்த வரிக்கொள்கையில் அரச துறையில் 5 வீதமானவர்களே உள்வாங்கப்படுகின்றனர்.

அவ்வாறு இருக்கையில் ஆசிரியர் சங்கம் பல்கலைக்கழ பேராசிரியர் சங்கம் இதனை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் போராட்டம் காரணமாக கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது.

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்துகொள்ளும் மதிப்பீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆயிரத்து 400 பேர் வரையானவர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்துகொள்ளாமல் இருந்து வருகின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கையால் தற்போது கல்வி பொதுத்



தராதர சாதாரண தர பரீட்சை இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டிருக்கிறது.

எனவே, அரசியலுடன் சம்பந்தமில்லாத மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

வரிக்கொள்கையை பயன்படுத்திக்கொண்டு மாணவர்களின் எதிர்காலத்தை அழித்துவிடக்கூடாது. அதனால், மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டாவது இந்தப் பணியை அவர்கள் ஆரம்பிக்க முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்றேன் -என்றார். (ஐ)

## இலங்கைக்கு...

தெரிவிக்கப்படுகிறது.

இதில் இரு தரப்பினரும் வர்த்தகம், முதலீடு, பொருளாதாரம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுங்க நடைமுறைகள் மற்றும் வர்த்தக வசதிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும் நிபுணர்கள் கருத்தின்படி, இது இலங்கைக்கு பாதகமானது எனவும் சீனாவின் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இலங்கையில் நடைமுறையில் உள்ள சில வரிகளை கட்டுப்படுத்துவதாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## பல்கலைக்கழக...

சம்மேளன உறுப்பினர்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் ஆரம்பமான கலந்துரையாடல் நள்ளிரவு வரை நீடித்ததாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னஹெக்க தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும், தெளிவான தீர்மானம் ஒன்று கிடைக்கும் வரையில், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடப் போவதில்லை என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம், கடந்த மாதம் 9ஆம் திகதி முதல், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மரபுரிமைகளை...

வேண்டும்.

2) குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

3) இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4) மட்டு. மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

5) போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் அடையாள உண்ணாநோன்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எம் மரபுரிமைகளை வென்றெடுக்க ஆன்மீகத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், சமுக மட்ட அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக சமூகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படும் இந்த எழுச்சி போராட்டத்தின் மூலம் தமிழர் மரபுரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்கள் திரண்டு வந்து பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த காலங்களில் பல கால அவகாசங்கள் வழங்கப்பட்டு , ஏமாற்றப்பட்ட நிலையில் உரிய தீர்வு உடனடியாக வழங்கப்படாவிடுத்து தொடர் போராட்டங்களை பல்வேறு பரிணாமங்களில் முன்னெடுக்கப்படும் என்பதை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ)

## சிரேஷ்ட...

நாட்டில் யுத்தம் இடம்பெற்ற நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் தமக்கான அச்சுறுத்தல்களையும் கருத்திற்கொள் ளாது செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார்.

அவரின் பூதவுடல், வவுனியா வைரவப்புளியங்குளம் 10 ஆம் ஒழுங் கையின் உள்ள அவரது இல்லத்தில், அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரியைகள் இன்று இடம் பெறவுள்ளதாக அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

## மூன்று...

ஆதரவுடன் அனைத்து இலங்கையர்களுக்கும் உரிய மரியாதையை வழங்குவதே இந்தக் குழுவின் முதற்கட்டமாக அமைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

உபகுழுவின் இரண் டாவது படி- பயங்கரவா தத் தடைச் சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கு இணங்க மறுசீரமைப்பதற்கு முன்னர் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல் செயற்பாடாக உள்ளூர் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவுவதே உபகுழுவின் மூன்றாவது படி என்றும் அலி சப்ரி குறிப்பிட்டார்.

இன நல்லிணக்கச் செயற்பாட்டுக்கு முன்னுரிமை அளித்து, பிரச்னைகளுக்கு நீண்டகாலத் தீர்வுகளை வழங்குவதற்கு ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதாரச் சீர்திருத்தத்தை அடைவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வை என வெளிவிவகார அமைச்சர் கூறினார். (அ)

## கடன்...

உதவும் என்று எதிர்பார்ப்பதாகவும் மத்திய வங்கி ஆளுநர் கூறினார்.

முன்னதாக சீனா, இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு உதவவேண்டும் என்று அமெரிக்க திறைசேரி செயலாளரும் கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில், மத்திய வங்கி ஆளுநரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இதேவேளை, இலங்கை மீதான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை செயல்முறையை ஆரம்பிப்பது குறித்து, ஜப்பான் மற்றும் இந்திய நிதி அமைச்சர்கள் அறிவிக்க உள்ளனர்.

வாஷிங்டனில் இன்று நடைபெறும் வசந்தகால கூட்டத்துக்கு அப்பால் நடைபெறவுள்ள செய்தியாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## பயங்கரவாத...

பூதாகரமாக்கிச் செயற்பட்டு வருகின்றனர்.

இதனை விட கடுமையான சட்டம் இந்தியாவில் இருக்கிறது. இந்தியாவில் அந்த சட்டத்தை பயன்படுத்தியே தற்போது ராகுல் காந்தி கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அவரது பிரஜா உரிமையை இல்லாமல் செய்யவும் இடமிருக்கிறது.

எமது நாட்டிலும் தற்போது இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் கடுமையானது. அதனால்தான் அதற்கு எதிராக சர்வதேச நாடுகள் சிவில் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து, அதனை நீக்குமாறு தெரிவித்து வந்தன.

மனித உரிமை அமைப்புகளும் இதற்கு எதிராக கருத்து தெரிவித்திருந்தன. அதனால்தான் தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றியமைத்து, பல முன்னேற்றகரமான திருத்தங்களுடன் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

என்றாலும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் அதனை விமர்சித்து வருவதால், அதுதொடர்பில் கலந்துரையாடி திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகவே இருக்கிறது-என்றார். (அ)

# இலங்கை-இந்திய படகு சேவைக்காக காங்கேசன்துறைமுகம் விரிவாக்கம்!




யாழ்ப்பாணம், ஏப். 13

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கு ஆதரவாக அதிக போக்குவரத்துக்கு இடமளிக்கும் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கில், இலங்கை கடற்படை காங்கேசன்துறை துறைமுகத்தை விரிவுபடுத்த ஆரம்பித்துள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் இந்தியாவின் பாண்டிச்சேரிக்கும் இடையில் மிகவும் மலிவு மற்றும் வசதியான போக்குவரத்து முறையை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கம் கப்பல் சேவை திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பணிப்புரையின் பேரில், துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை கடற்படை, காங்கேசன்துறை துறைமுக வசதியை அதன் ஆளணி மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதன் மூலம் விரிவாக்குவதற்கு தீவிரமாக ஆதரவளித்துவருகிறது.

அதன்படி, கடற்படையினரால் இந்த திட்டம் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி தொடங்கப்பட்டது.

இதனால், இந்தப் பயணிகள் படகுச் சேவையைப் பயன்படுத்த உத்தேசித்துள்ள மக்களின் குடிவரவு மற்றும் சுங்க அனுமதிக்கான பயணிகள் முனையத்தை நிர்மாணிக்கும் பணியை, இலங்கை கடற்படை மேற்கொண்டுள்ளது.

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பொருட்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையால் வழங்கப்படுகின்றன.

தற்போது, கடற்படை கட்டுமானப் பொறியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ், 60 கடற்படை வீரர்கள் கொண்ட குழு 1,000 சதுர மீற்றர் பயணிகள் முனையத்தை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

பயணிகள் முனையத்தின் நிர்மாணப் பணிகள் விரைவில் முடிவடைந்து அதன் செயற்பாட்டு நோக்கங்களுக்காக இந்த வசதி இலங்கை துறைமுக அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், இலங்கை துறைமுக அதிகாரசபைக்காக இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் மொத்த கட்டுமானங்களுக்காக 144 மில்லியன் ரூபா செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் ஆம் திகதி படகுச் சேவையின் செயல்பாடுகள் தொடங்கும் என்று துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு கடந்த மாதம் தெரிவித்தது.

இதனூடாக, 100 கிலோ எடையுள்ள பொருட்களை எடுத்துச் செல்ல பயணியொருவருக்கு அனுமதி வழங்கப்படும் அதே வேளையில், ஒரு வழி பயணத்துக்கு ஒருவருக்கு 50 அமெரிக்க டொலர் (சுமார் 15,000 ரூபா) வசூலிக்க படகு உரிமையாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

முதல் கட்டத்தில் பகல்நேர சேவைகள் மட்டுமே முன்னெடுக்கப்படும்.

பாண்டிச்சேரியில் உள்ள காரைக்கால் துறைமுகத்தில் இருந்து காங்கேசன் துறைக்கு ஒரு நேரத்தில் 150 பயணிகளை ஏற்றிச் செல்லமுடியும். ஒரு வழி பயணத்துக்கு 4 மணி நேரம் செலவாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொலித்தீன் பைகளுக்கு நுகர்வோரிடம் கட்டணம் அறவிடுவதற்கு அரசு திட்டம்!

கொழும்பு, ஏப். 13

சிறப்பு அங்காடிகளில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களை கொண்டு செல்வதற்காக வழங்கப்படும் பொலித்தீன் பைகளுக்காக நுகர்வோரிடம் கட்டணம் அறவிடும் வகையில் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு சுற்றாடல் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சிறப்பு அங்காடிகளில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது கட்டுப்பாட்டை மீறி பொலித்தீன் பைகள் விநியோகிக்கப்படுவதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சுற்றாடலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவற்றை கருத்திற்கொண்டே சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

## இலங்கை...

வாஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா வுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

மேலும் இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தியதாக இராஜாங்க அமைச் சர் குறிப்பிட்டார்.

நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களுடனும் சர்வதேச பங்காளிகளின் ஆதரவுடனும் வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றும் கூறினார். (அ)

## இந்தியா...

ஆகியவை வசந்த காலக் கூட்டங்கள் குறித்து இன்று செய்தியாளர் சந்திப்பை நடத்தும்” என்று ஜப்பானிய நிதி அமைச்சக அறிக்கையை மேற்கோள் காட்டி சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. (அ)

# இரத்தத்துக்கு பெரும் தட்டுப்பாடு குருதி தானம் செய்ய அழைப்பு!

**யாழ். போதனா மருத்துவமனை விடுத்தது**

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகி றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியவில்லை. எனவே, இளைஞர், யுவதிகள் இரத்த தானம் செய்வதற்கு முன்வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். இரத்த வங்கி பிரிவு அறிவித்துள்ளது.

# ஆற்றில் மூழ்கி காணாமற்போன 2 சிறுவர்களின் சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 13

பலாங்கொடை வலவே ஆற்றில் மூழ்கி காணாமற் போன இரண்டு சிறுவர்களும் சடலங்களாக மீட்கப்பட் டுள்ளனர். பொலிஸாரும் பிரதேச மக்களும் இணைந்து முன் னெடுத்த தேடுதலின் போது சடலங்கள் மீட்கப்பட் டுள்ளன.

அல்லேஅராவ மற்றும் தும்புகொட ஆகிய பகுதி களை சேர்ந்த 17, 15 வயதான இரண்டு சிறுவர்களே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் இண்டு பேருடன் வலவ ஆற்றில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் குளிக்கச் சென்றி ருந்த போது குறித்த 2 சிறுவர்களும் நீரில் மூழ்கி காணா மற்போயிருந்தனர். (அ)

# 10,000 ரயில் தண்டவாளங்கள் சீனாவில் இருந்து இறக்குமதி!

பிஜிங், ஏப். 13

சீனாவில் இருந்து 10,000 ரயில் தண்டவாளங்களை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ், இந்த ரயில் தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்பட வுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த மாத இறுதியில் ரயில் தண்டவாளங்கள் நாட்டுக்கு கிடைக்கப்பெறும் என போக்குவரத்து அமைச்சு கூறியுள்ளது. (அ)

# பற் சுகாதாரம் குறித்து அவதானம் வேண்டும்!

கொழும்பு, ஏப். 13

புத்தாண்டு காலத்தில், பற் சுகாதாரம் தொடர்பில் பொதுமக்கள் மிக அவதானத்துடன் இருக்க வேண்டும் என சுகாதாரத்துறை வலியுறுத்தியுள்ளது.

சிறார்களும், முதியவர்களும், இந்தக் காலப்பகுதில் இனிப்புப் பண்டங்களை அதிகளவில் உட்கொள்வதால், உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என பற்சிகிச்சை நிபுணர் அசேல விஜேசுந்தர அறிவு றுத்தியுள்ளார். இல்லையெனில் பற் சிதைவு ஏற்படக் கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் அதிகளவில், பற் சிதைவு பிரச்னை உள்ளது. குறிப்பாக சிறு பிள்ளைகளிடையே, பற்சிதைவு நிலையானது வேகமாக இடம்பெறுகின்றது. புத்தாண்டு காலத்தில், மக்கள் இனிப்புப் பண்டங்களை அதிகளவில் உட்கொள்கின்றனர். இனிப்புப் பண்டங்கள், அதிக நேரம் வாயில் இருந்த நல் அதன் ஊடாக பற்றீரியாக்கள் உருவாகி பற்சிதைவு பிரச்னை ஏற்படும்.

அதனால், பண்டிகைக் காலத்தில் சிறு பிள்ளைகள் உட்பட அனைவரும் இனிப்புப் பண்டங்களை உண்ட பின்னர், உடனடியாக பற்களைத் துலக்க வேண்டும்.

குறிப்பாக, பிரதான உணவு வேளைகளின் பின்னர், இனிப்புப் பண்டங்களை உட்கொள்ள வேண்டும். அதன் பின்னர், பற்களைத் துலக்க வேண்டும் என்பதை நினை விற்கொள்ள வேண்டும்.

எனவே, ஏனைய சந்தர்ப்பங்களில், பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு, இனிப்புப் பண்டங்களுக்குப் பதிலாக பழங்களை வழங்குவது தொடர்பில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும் என பற் சிகிச்சை நிபுணர், அசேல விஜேசுந்தர தெரிவித்தார். (அ)

# பிரசவ ஊசி செலுத்தப்பட்டதன் பின்னர் தாய் உரியவாறு கவனிக்கப்படாமையால் சிசு பலி!

யாழ்ப்பாணம், ஏப். 13

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிசுவொன்று உயிரிழந் தமை தொடர்பில் விசாரணை மேற் கொள்ள உத்தரவிடுமாறு, பொலிஸ ார் ஊடாக நீதிமன்றத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜாவினால், மேலதிக விசார ணையை மேற்கொள்வதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புலோலி வடக்கு, கூவில் பகு தியை சேர்ந்த பெண் ஒருவர் பிரசவத்திற்காக வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு நேற்று முன் தினம் குழந்தை பிறந்த போதிலும் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை திடீர் மரண விசா ரணை அதிகாரி சதானந்தன் சிவ ராஜா விடுத்த பணிப்புரைக்கு அமைய, சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனையை மேற் கொண்டுள்ளார்.

பிரசவ ஊசி செலுத்தப்பட்டதன் பின்னர் தாய் உரிய முறையில் கவ னிக்கப்படாமையால், கருப்பை வெடித்து, சிசுவுக்கு குருதி கடத்தப் படுவது தடைப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பருத்தித் துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், மேல திக விசாரணைகளை மேற்கொள்வ தற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, பருத்தித்துறை பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# தொடர்ந்தும் எங்களினால் பொறுமை காக்கமுடியாது!

**பல்கலை விரிவுரையாளர் சம்மேளனம் எச்சரிக்கை**

கொழும்பு, ஏப். 13

தமது சட்டபூர்வமான கோரிக் கைகளுக்கு பதில் வழங்காதிருக்கும் அரசாங்கத்தின் கொள்கை குறித்து தொடர்ந்தும் பொறுமை காக்க முடியாது என பல்கலைக்கழக விரி வுரையாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தமது உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படும் அள விற்கு பிரச்னை தீவிரமடைந்துள்ள தாக சம்மேளனம் குறிப்பிட்டுள் ளது.

தமது பிரச்னைகளுக்கு தீர்வு காண, கல்வி அமைச்சர் மேற் கொள்ளும் அர்ப்பணிப்பு பாராட் டுதலுக்குரியது என்ற போதிலும் அரசாங்கத்தின் ஏனைய அதிகாரி களினதும் ஒத்துழைப்பு அவசியம் என அவர்கள் விடுத்துள்ள அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

தமது சங்கத்தின் உறுப்பினர் களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக் கப்படும் அளவிற்கு பிரச்னை வலுவ டைந்துள்ளதாகவும் அதனை வன் மையாகக் கண்டிப்பதாகவும் பல்க லைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

அனைத்து இலங்கையர்களுக் கும் அச்சமின்றி கருத்து தெரிவிப்ப தற்கான சந்தர்ப்பம் இருக்கவேண் டும் என அவர்கள் தெரிவித்துள்ள னர்.

தாம் முன்வைத்த கோரிக்கை களை அரசாங்கம் கவனத்திற் கொள்ளாதிருப்பதன் மூலம் கல்வித் துறைக்கு பாரிய அழுத்தம் ஏற்படு வதாகவும் அரசாங்கம் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் எனவும் பல்கலைக்கழக விரிவுரை யாளர்களின் சம்மேளனம் தெரிவித் துள்ளது.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண்ப தற்காக அரசாங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர் களின் சம்மேளனம் மற்றும் தொழில்சார் வல்லுநர்க ளின் தொழிற்சங்க கூட்டமைப்பு டன் பேச்சுவார்த்தை நடத்தவேண் டும் எனவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் கூறியுள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் கடந்த ஒன்றரை மாத காலத்திற்குள் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி சில பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரச அச்சக ஊழியர்களுக்கு கொடுப்பனவு இல்லையாம்!

கொழும்பு, ஏப். 13

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங் களை அச்சடித்த அரச அச்சக ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்காக திறைசேரியி லிருந்து 5 கோடி ரூபா வுக்கும் அதிகமான பணம் வழங்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அச்சடிக்கும் பணியில் ஈடுபட்டு வந்த 200 இற்கும் மேற் பட்ட அரசு அச்சக ஊழியர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட வில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சுமார் 22 மாவட்டங் களின் தபால் மூல வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளதாக அரச அச்சக பிரதான கங்காணி லியனகே தெரிவித்தார்.

போதிய நிதி இல்லையென காரணம் கூறி, தேர்தல் தொடர் பான மற்ற அனைத்து அச்சு நடவ டிக்கைகளையும் தற்காலிகமாக நிறுத்த அரசு அச்சகம் சமீபத்தில் முடிவு செய்தது. (அ)

# தேசிய கல்வியியல் கல்லூரிக்குள் கசிப்பு உற்பத்தித் தொழிற்சாலை!

கொழும்பு, ஏப். 13



கம்பஹா தலைமையக பொலிஸார், தேசிய சியான கல்வியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள சட்ட விரோத மதுபான தொழிற்சாலையை சுற்றிவளைத்து, சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் கல்வி விஞ்ஞான பீடத் தைச் சேர்ந்த சிற்றூழியர் என பொலிஸார் தெரி விக்கின்றனர்.

சந்தேகநபரின் மனைவி சியான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் சிற்றூழியர் எனவும் அவர் கல்வியியல் கல்லூரிக்குச் சொந்தமான மற்றுமொரு விடுதியில் வசிப்பவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சுற்றிவளைப்பின்போது அங்கிருந்த சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் சோதனையிட்டதில் அவரிட மிருந்த 2 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட் டதுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா தலைமையக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பின்போது, ஆண்கள் விடுதி கட்டடத்தின் சேமிப்பு அறை மற்றும் பணியாளர் தங்கும் விடுதியில் சட்டவிரோத மதுபானம் தயாரிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

மது உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பணியாளர் கள் தங்கும் விடுதி பீடாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகில் அமைந்திருந்தது.

கல்வியியல் கல்லூரி வளாகத்தில் கசிப்பு உற்பத்திக்கு மேலதிகமாக, அதே காசைப் பயன்படுத்தி கல் சாராயம் போன்ற ஒரு வகை மதுபானமும் தயாரிக்கப்பட்டு, எதிர் வரும் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் இவற்றை விற் பனை செய்ய திட்டமிடப்பட்டிருந்தமை விசாரணை களில் தெரியவந்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.